பகைங்கள்: பன்னிரண்டு

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 மாசி 14 செவ்வாய்க்கிழமை (26-02-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:93

# முதலில் இடைக்கால நிர்வாகம் அதன் பின்பே தீர்வுக்கான பேச்சு

## அதற்கும் நீண்டகாலம் பிடிக்கும்

- நமது அரசியல் செய்தியாளர் -

கொழும்பு,பெப்ரவரி26

**முதலில் வடக்கு - கிழக்குக்கு இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்படும். விடுதலைப் புலிகள் அந்த இடைக்கால நிர்வாகப் பொறுப்பை ஏற்று ஜன நாயகச் செயற்பாட்டில் தமக்குள்ள திறமையைக் காட்டுவார்கள். அடுத்த கட்டமாகவே இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கான பேச்சு நடைபெறும். அதற்குக் காலதாமதமாகும்; வருடக்கணக்கில் கூட எடுக்கலாம்.**

**மேற்கண்டவாறு நம்பகரமான அரச வட்டாரங்களில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. இவற்றைத் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நெருங்கிய வட்டாரங்கள் உறுதி செய்தன.**

அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்து விட்டதால் சூட்டோடு சூடாகப் பேச்சு நடக்கும் என்றும் -

இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்துவிடும் என்றும் - சிலர் கருதுகின்றார்கள்.

ஆனால் யதார்த்த நிலைமை அப்படியல்ல என்று அந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

நிரந்தரத் தீர்வுக்கான பேச்சுத் தொடங்குவதற்கு வாரங்கள் அல்ல; மாதங்கள் அல்ல; வருடங்கள் நகர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றும் அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

வடக்கு - கிழக்கில் இயல்பு நிலையை ஏற்படுத்தி மக்களின் கஷ்டங்களை நீக்கி, நம்பிக்கையை வளர்க்கும் நடவடிக்கைகள் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது முதற்கட்டம்.

இரண்டாவது கட்டமாக வடக்கு - கிழக்குக்கு இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்படும். இதற்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் பொறுப்பாக இருப்பார்கள்.

இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்படுவது புதிய விஷயம் அல்ல;

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொ.ஐ.மு. - ஜே.வி.பி. - ஈ.பி.டி.பி. உடன்பாட்டை எதிர்க்கக் கூட்டணி

### வழக்குத் தொடரவும் திட்டம்

கொழும்பு,பெப்.26

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள யுத்த நிறுத்த உடன்படிக்கையை முழு அளவில் எதிர்ப்பதென்று ஜனாதிபதி மாளிகையில் கூடிய பொதுமக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர்கள் முடிவு செய்திருக்கின்றார்கள்.

இந்த அணியில் ஜே.வி.பியும் டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பியும் இணைந்து கொண்டுள்ளன. இவை ஒன்றுசேர்ந்து உடன்படிக்கைக்கு எதிராக வழக்குத் தொடரவும் திட்டமிட்டுவருவதாகக் கூறப்படுகிறது.

'கொழும்பு பேஜ்' இணையத்தள செய்தி நிறுவனம் இப்படித் தகவல் வெளியிட்டிருக்கின்றது. அது மேலும் தெரிவித்திருப்பதாவது:-

அரசிடம் மாதாந்தம் எழுபது லட்சம் ரூபாயைப் பெற்றுக்கொள்வதாகக் கூறப்படும் டக்ளஸ் தேவானந்தாவின் குழுவிடமிருந்து இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி முப்பது நாள்களுக்குள் ஆயுதங்கள் களையப்படும்.

மேற்படி யுத்தநிறுத்த உடன்பாட்டை எதிர்க்கும் அணியின் கூட்டத்துக்கு ஜனாதிபதி குமாரதுங்க தலைமைவகித்தார்.

நாடாளுமன்றத்தில் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவது உட்பட உடன்படிக்கையை எதிர்க்கும் பல்வேறு வழிமுறைகள் குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தலில் இந்த உடன்படிக்கையால் அரசியல் சூழ்நிலையை முதன்மைப்படுத்தி முழுஅளவில் அரசியல் லாபம் ஈட்டுவது என்றும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## உடன்படிக்கையின் சட்டவலு குறித்து சந்தேகம் எழுப்புகிறது சிஹல உறுமய

### நீதிமன்றத்தை அணுகப்போகிறதாம்

கொழும்பு,பெப்.26

அரசும் விடுதலைப் புலிகளும் கைச்சாத்திட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையின் சட்டபூர்வமான வலு குறித்து சந்தேகத்தின் அடிப்படையில் நீதிமன்றம் செல்லவுள்ளதாக சிஹல உறுமய கட்சி தெரிவித்துள்ளது.

இந்த உடன்படிக்கையின் சரத்துக்களின்படி முப்படைகளின் நடவடிக்கைகளுக்கு சில வரையறைகளும் சில நிபந்தனைகளும் விதிக்கப்பட்டுள்ளதால், ஸ்ரீலங்கா அரசு சார்பில் அதில் கைச்சாத்திடக்கூடிய அதிகாரம் பிரதமருக்குக் கிடையாது; பதி

(12ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்கள் பதவியேற்கும் நிகழ்வு நேற்றும் ஒத்திவைப்பு

கொழும்பு,பெப்.26

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக பதவி உயர்த்தப்படும் ஏழு பேரும், சமுர்த்தி அமைச்சுப் பொறுப்பை ஏற்று அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்காவும் சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளும் வைபவம் நேற்று ஐந்தாவது தடவையாகவும் ஒத்திவைக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சி நான்கு தடவைகள் ஒத்திவைக்கப்பட்ட பின்னர் நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

ஆனால் முல்லைத்தீவுத் தாக்குதலில் கொல்லப்பட்ட படைவீரர்களின் நினைவு நிகழ்ச்சியில்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமரின் பாதுகாவலர்கள் ஏழு பேர் கைது!

கொழும்பு,பெப்.26

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு காலிமுகத் திடல் பகுதியில் போதையில் அட்டகாசம் புரிந்ததாகக் கூறப்படும் ஏழு பாதுகாப்பு அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டனர். பிரதமரின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த இவர்கள், பெண் பொலீஸாருடன் சேஷ்டை விட்டதாகக் கூறப்படுகின்றது. (உ)





நேற்றுமுன்தினம் திருமலையில் நடைபெற்ற சமாதானப் பேரணியின் போது எடுக்கப்பட்ட படத்தை மேலேயும் பேரணியின் முடிவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பங்குபற்றியோரில் ஒரு பகுதியினரை இரண்டாவது படத்திலும் காணலாம். *(நன்றி தமிழ்நெற்)*

## யாழ். பல்கலை மற்றும் செயலகத்தில் அமைச்சர்களுடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.26

இரண்டு நாள்கள் விஜயம் மேற்கொண்டு இன்று யாழ்ப்பாணம் வரும் மூன்று அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாழ். பல்கலைக் கழகத்திலும், யாழ். செயலகத்திலும் நடைபெறும் கலந்துரையாடல்களில் பங்கேற்கின்றனர்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் கல்வி தொடர்பான கலந்துரையாடல் காலை 10மணிக்கு துணைவேந்தர் பொ.பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் பயிற்சிக்கான அமைச்சர் கபீர் காசிம் கலந்துகொள்கின்றார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பீடாதிபதிகள், பேராசிரியர்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி,

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் நான்காவது எம்.பி. நேற்றுக் கைது!

கொழும்பு,பெப்.26

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் நான்காவது நாடாளுமன்ற உறுப்பினர் நேற்று கைது செய்யப்பட்டார்.

தனியார் பாதுகாப்புச் சேவை ஒன்றின் உரிமையாளரான நாடாளுமன்ற உறுப்பினர் அஜந்த டி சொய்ஸாவே தற்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரையும் இவருடன் கைதுசெய்யப்பட்ட இவரது நிறுவன முகாமையாளர் பிரேமசிறி சேனநாயக்கா, பொ.ஐ.முன்னணியின் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஜெயரட்ண திஸநாயக்கா ஆகியோரையும் விளக்கமறியலில் வைக்க கண்டி மேலதிக நீதிவான் பிரதீப் ஹெட்டியாராச்சி உத்தரவிட்டார்.

ஜனாதிபதி குமாரதுங்கவின் விசேட அனுமதியின் பேரில் மேற்படி தனியார் பாதுகாப்பு நிறுவனத்துக்கு பிஸ்டல்கள் வழங்கப்பட்டதாகவும்-

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் அஸ்லி வில்ஸ் மங்கள விளக்கேற்றுவதையும் அங்கு தூதர் வில்ஸ் உரையாற்றிய சமயம் அவரது துணைவியார், போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் அம்பலவாணர் மற்றும் தூதரக அதிகாரிகள் செவிமடுப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் : பொ.இராஜேஸ்வரன்)

# இலங்கையில் ஏற்பட்டுள்ள சூழ்நிலை மிகவும் வரவேற்கத்தக்க ஒரு விடயமே

## யாழ். வந்த அமெரிக்கத் தூதர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,பெப்.26

இலங்கையில் தற்பொழுது ஏற்பட்டுள்ள சுமுகமான சூழ்நிலை மிகவும் வரவேற்கத்தக்க ஒரு விடயம் ஆகும்.

நேற்று யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வருகை தந்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் அஸ்லி வில்ஸ் இவ்வாறு தெரிவித்தார்.

அமெரிக்க அரசினால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அண்மையில் வழங்கப்பட்ட வைத்திய உபகரணங்களை உத்தியோகபூர்வமாகக் கையளித்து உரையாற்றிய சமயமே தூதர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இருந்ததை விடத் தற்பொழுது இந்த நாட்டில் நல்லதோர் அமைதிச் சூழல் ஏற்பட்டுள்ளது. அதையிட்டு அமெரிக்கா பெருமகிழ்ச்சி அடைகிறது.

இந்த வைத்தியசாலைக்கு எமது நாட்டினால் வழங்கப்பட்ட வைத்திய உபகரணங்கள் தற்பொழுது இங்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எதிர்காலத்திலும் இதேபோன்று பல உதவிகளைச் செய்வதற்கு நாங்கள் தயாராக உள்ளோம். அதற்கு இந்த அமைதிச் சூழ்நிலை மேலும் வழி வகுக்கும் என்று நம்புகிறோம். இவ்வாறு தூதர் மேலும் தெரிவித்தார்.

முன்னதாக நண்பகல் 12.25 மணிக்கு போதனா வைத்திய சாலைக்கு விஜயம் செய்த தூதர் அஸ்லி வில்ஸ் வைத்தியசாலை நிர்வாகத்தினரால் மாலை சூட்டி வரவேற்கப்பட்டார்.

தூதருடன் அவரது துணைவியார் திருமதி ஜினா வில்ஸ் மற்றும் தூதரக அதிகாரிகள் ஜோய் நொவாக், வில் அவ்றி, பிராங் ரிங்டொன், ஹரி றொபின்சன், பத்மினி இராஜதுரை ஆகியோரும் வருகை தந்திருந்தனர். (ஒ-10-9-180)

# கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவருக்கு 43 ஆயிரம் ரூபா அபராதம்

## யாழ்.நீதிமன்றம் விதித்தது

யாழ்ப்பாணம்,பெப்.26

கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இருவருக்கு யாழ்.நீதிமன்றினால் 43 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. இவர்கள் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று யாழ்.நீதிமன்றில் இடம்பெற்றது. விசாரணைமுடிவில் நீதிவான் இ.த.விக்னராஜா இந்த உத்தரவினை விடுத்தார்.

நீர்வேலி மேற்கு கரந்தனைச் சேர்ந்த அருட்பிரகாசம் பாஸ்கரன் என்பவருக்கு 8 போத்தல் கசிப்பு வைத்திருந்த குற்றத்துக்காக 35 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் -

3 ஆயிரம் ரூபா தர்மப்பணம் இருபாலை கானான் சிறுவர் பராமரிப்பு இல்லத்துக்கு வழங்குமாறும் - தீர்ப்பளிக்கப்பட்டது.

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த சபாபதி பேரின்பராசா என்பவருக்கு 2 போத்தல் கசிப்பு வைத்திருந்த குற்றத்துக்காக 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது. (ஒ-10)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.26

தென்மராட்சிப் பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டிகளுக்குப் பொறுப்பான ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் 28ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-4)

# படையினருடன் இணைந்து பணியாற்றும் திட்டமெதுவும் ஈ.பி.டி.பிக்கு இல்லை

## அக்கட்சியின் ஆலோசகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.26

இராணுவத்துடன் இணைந்து பணியாற்றும் திட்டம் எதுவும் ஈ.பி.டி.பிக்கு கிடையாது என அக்கட்சியின் ஆலோசகரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்திருப்பதாவது:-

அரசு ஆயுதங்களை ஒப்படைக்கக் கோரினால் அதனை நிறைவேற்ற ஈ.பி.டி.பி. தயாராக உள்ளது. விடுதலைப் புலிகளிடமிருந்து எம்மைப் பாதுகாப்பதற்காகவே ஆயுதங்களை வைத்துள்ளோம்.

இவை சட்டவிரோதமானவை அல்ல. எமது பாதுகாப்புக்கு அரசாங்கம் உத்தரவாதம் அளித்தால் ஆயுதங்கள் தேவை இல்லை. அத்துடன் தீவுப் பகுதியில் இராணுவமும் கடற்படையும் போதிய பாதுகாப்பை வழங்கும் என நம்புகின்றோம். எமது அலுவலகங்கள் தொடர்ந்தும் இயங்கவுள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஆயுதங்கள் வைத்திருப்பது தொடர்பாக புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவிக்கையில் -

புலிகளிடமிருந்து எம்மைப் பாதுகாப்பதற்காக வைத்திருந்த ஆயுதங்களை மீள ஒப்படைக்குமாறு அரசாங்கம் கோரினால் அதனை வழங்கி விடுவோம். ஆனால் எமது பாதுகாப்புக்கு அரசு உத்தரவாதம் வழங்க வேண்டும் வடக்கு - கிழக்கிலுள்ள எமது அலுவலகங்களை தொடர்ந்து வைத்திருப்போம். இராணுவத்தில் சேரும் எண்ணம் புளொட் அமைப்பினருக்குக் கிடையாது. அவ்வாறான தேவையும் இல்லை. ஆனால் எமது உறுப்பினர்கள் இராணுவத்தில் இணைய விரும்பினால் அதற்கான தடை எதுவும் இல்லை. நாங்கள் துணைப்படை அல்ல. ஆயுதக் குழுவாக இருந்த நாம் ஜனநாயக நீரோட்டத்தில் சங்கமித்தோம். ஆயுதங்களில் பயிற்சி பெற்ற எமது உறுப்பினர்களில் அநேகர் தற்போது அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

எனவே இராணுவத்தில் இணைந்து பணியாற்ற அவர்கள் விரும்பமாட்டார்கள். தொழிலுக்காக அவர்கள் அதில் சேருவதற்கு புளொட் தடையாக இருக்கமாட்டாது என்று கூறினார். (ஒ-8)

# தடுத்து வைக்கப்பட்ட படையினர் யாழ். சிறையில் உண்ணாவிரதம்

## வழக்குகளை தெற்குக்கு மாற்றக் கோரி

யாழ்ப்பாணம்,பெப்.26

பல்வேறு குற்றச் சாட்டுக்களின் பேரில் யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆறு படையினர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமைமுதல் உண்ணா விரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர். தாம் சம்பந்தப்பட்டுள்ள வழக்குகளை, தென்பகுதி நீதிமன்றம் ஒன்றுக்கு மாற்றும்படியும் -

தம்மை தென்பகுதி சிறைச்சாலைகளுக்கு மாற்றுவதன் மூலம் தமது பெற்றோர் மற்றும் உறவினர் தங்களை வந்து பார்ப்பதற்கு வழி செய்யுமாறும் -

கோரியே இவர்கள் தமது உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இவர்களின் போராட்டம் நேற்றும் இரண்டாவது நாளாக தொடர்ந்து இடம்பெற்றது. (ஒ-9)

# காலை 7மணி முதல் மாலை 6.30 மணிவரை எரிபொருள் நிலையங்கள் இயங்க வேண்டும்

## இல்லாவிடில் அனுமதி ரத்து என்கிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணம்,பெப்.26

தினமும் காலை 7மணி முதல் மாலை 6.30 மணிவரை திறந்து இயங்காத எரிபொருள் நிரப்பு நிலையங்களின் அனுமதிகள் உடனடியாக ரத்துச்செய்யப்படும்.

நேற்று எரிபொருள் விநியோகம் தொடர்பாக யாழ். செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் யாழ. அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

யாழ்ப்பாணத்தில் தற்போது ஒரு சுமுகமான சூழ்நிலை தோன்றியுள்ளது. எனவே பொதுமக்களின் அத்தியாவசிய தேவைகள் பூரணமாக நிறைவு செய்யப்படவேண்டும்.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக நிலவி வந்த எரிபொருள் தட்டுப்பாடு தற்போது படிப்படியாக நீங்கி வருகின்றது. இதை முற்றாக நீக்கி எரிபொருள் குடா நாட்டு மக்களுக்கு தாராளமாகக் கிடைக்க பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

நாளுக்கு நாள் மக்களின் எரிபொருள் பாவனை அதிகரித்து வருகின்றது. அதற்கேற்ற வகையில் கூட்டுத்தாபனம் கூடிய எரிபொருள்களை விநியோகிக்க வேண்டும். அத்துடன் எரிபொருளை நிரப்பி வைத்திருக்கக் கூடிய எரிபொருள் தாங்கிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்படவேண்டும்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் உள்ள குறைபாடுகள் விரைவில் நிவர்த்தி செய்யப்பட்டு, தனியார் முகவர் நிலையங்களுக்கு தேவையான எரிபொருள் விநியோகமும் நடைபெறவேண்டும்.

எரிபொருள் நிரப்பு நிலையங்கள் காலை 7 மணி முதல் மாலை 6.30 மணிவரை எரிபொருள் விநியோகத்தில் ஈடுபடவேண்டும். அவ்வாறு இயங்காத எரிபொருள் நிரப்பு நிலையங்களின் அனுமதிகள் ரத்துச்செய்யப்படும். என்று அரச அதிபர் தெரிவித்தார்.

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் கருத்துத் தெரிவிக்கையில்:

கட்டடம் இல்லாத எரிபொருள் நிரப்பு நிலையங்கள் முன்னுரிமை அடிப்படையில் கட்டிக் கொடுக்கப்பட வேண்டியதுடன் எரிபொருளை நிரப்பும் பம்புகளும் சீர்செய்யப்பட வேண்டும்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குத் தேவையான நிலத்தடி எரிபொருள் தாங்கிகளை அமைப்பதற்குப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் நிலத்தடி தாங்கிகள் இல்லாத எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு பரல்களில் எரிபொருளை நிரப்பக் கூடிய வசதி செய்யப்படவேண்டும். என்றார்.

இக்கலந்துரையாடலில் கலந்து கொண்ட பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ். பிராந்திய முகாமையாளர் ஏ.அந்தோனிப்பிள்ளை பேசுகையில் -

விரைவில் எரிபொருள் விநியோகம் தொடர்பான குறைபாடுகள் முற்றாக நீக்கப்பட்டு சீரான எரிபொருள் விநியோகம் நடைபெறும்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நிலவும் குறைபாடுகள் விரைவில் நிவர்த்தி செய்யப்பட்டு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் நிறைவாக இயங்க வசதி செய்யப்படும்.

அத்துடன் மீளக்குடியமர்ந்த பகுதிகளிலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. விரைவில் அவை இயங்கவுள்ளன. என்று தெரிவித்தார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரி எஸ்.சிவஞானம் தெரிவிக்கையில் -

எரிபொருள் முகவர்கள் தமக்குத் தேவையான எரிபொருளை உரிய முன்னறிவித்தல் கொடுத்து பெற்றுக்கொள்வதன் மூலம் எமது எரிபொருள விநியோகத்தை துரிதப்படுத்த முடியும். எரிபொருள் நிரப்பு நிலைய முகவர்கள் சாட்டுப்போக்குக் கூறாமல் எரிபொருளை மக்களுக்கு விநியோகிக்க வேண்டும். மின்சாரம் இல்லாத போது கைப்பம்புகள் மூலம் எரிபொருளை விநியோகிப்பதற்கு முகவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். என்று தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு தேவையான மண்ணெண்ணெயினை சீராக வழங்கும் நோக்கில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இரு நிலக்கீழ் தாங்கிகளை உரும்பிராய், உடுவில் கமநல சேவைத் திணைக்களத்தில் அமைத்து அதன் மூலம் மண்ணெண்ணெயினை விவசாயிகளுக்கு வழங்க இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் மேலதிக அரச அதிபர் துவைத்திலிங்கம் மற்றும் திணைக்கள அதிகாரிகள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் உட்பட அனுமதி பெற்ற எரிபொருள விற்பனை முகவர்களும் கலந்து கொண்டனர். (ஒ-8-180)

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி.கிழக்கு,பெப்.26

கோப்பாய் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் நடத்தப்படும் பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகளில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் இடம்பெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

**15 வயதுக்குட்பட்டோர் பிரிவு**

ஆவரங்கால் நடராஜா ராமலிங்க வித்தியாலயம் எதிர் கோப்பாய் மகா வித்தியாலயம்.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி எதிர் சிறுப்பிட்டி அ.த.க.பாடசாலை.

**17 வயதுக்குட்பட்டோர் பிரிவு**

ஆவரங்கால் நடராஜா ராமலிங்கம் வித்தியாலயம் எதிர் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.

கோப்பாய் மகாவித்தியாலயம் எதிர் அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி.

புத்தூர் கலட்டி. ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் எதிர் இடைக்காடு மகாவித்தியாலயம்.

**19 வயதுக்குட்பட்டோர் பிரிவு**

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி எதிர் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி எதிர் உரும்பிராய் இந்துக் கல்லூரி. (ஒ-180)

★ ★ ★

'நவீல்ட்' பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை காலை 9.30 மணிக்கு சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்திராக அங்கிலிக்கன் திருச்சபையின் குரு முதல்வர் எஸ்.பி.நேசகுமார் அடிகளார் கலந்துகொள்கிறார். திருமதி சாந்தி நேசகுமார் போட்டிகளில் வென்றோருக்கு பரிசில்களை வழங்குவார். (ஒ-9)

★ ★ ★

இணுவில் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி அதிபர் துரை எங்கரசு தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையாவும் சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய உடற் கல்விப் பணிப்பாளர் வி.பாலசிங்கம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ஆர்.கைலாயநாதன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக ஆங்கில விரிவுரையாளர் க.சி. ஸ்ரீகணேசனும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-4)

# தமிழக முதல்வராக ஜெயலலிதா எதிர்வரும் சனியன்று பதவியேற்பு!

சென்னை,பெப்.26

தமிழக முதல்வராக செல்வி ஜெயலலிதா எதிர்வரும் 2ஆம் திகதி மீண்டும் பதவியேற்க உள்ளார்.

சென்னையில் நேற்று வெளியிடப் பட்ட ஆளுநர் மாளிகைச் செய்திக் குறிப்பு ஒன்று இதனைத் தெரிவித் துள்ளது.

எதிர்வரும் 2ஆம் திகதி சனிக் கிழமை சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் பதவி யேற்பு நிகழ்வு இடம்பெறும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

முன்னதாக, ஆண்டிப்பட்டித் தேர் தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற செல்வி ஜெயலலிதாவை நாடாளுமன் றத் தலைவராக அ.தி.மு.கவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று



முன்தினம் தெரிவுசெய்தனர்.

ஜெயலலிதா நாடாளுமன்றத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட தற்கான கடிதத்தை முதல்வராக இருந்து தனத பதவியை இராஜினா மாச் செய்த ஓ.பன்னீர்செல்வம் ஆளு நரிடம் வழங்கினார். அத்துடன் தனது இராஜினாமாக் கடிதத்தையும் அவர் ஆளுநரிடம் கையளித்தார்.

அதனை ஏற்றுக்கொண்ட ஆளு நர், ஜெயலலிதாவை விரைவாகப் பதவியேற்குமாறு கேட்டுக்கொண் டார். (ம)

## ஒஸாமா பின்லேடன் இன்னமும் உயிருடன் இருக்கிறார்?

கடந்த செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி அமெரிக்க நகரங்கள் மீது நடத் தப்பட்ட தாக்குதல்களின் சூத்திரதாரி யென அமெரிக்காவால் குற்றஞ்சாட் டப்படும் ஒஸாமா பின்லேடன இன்னும் உயிருடனேயே இருப்பதாக அமெரிக காவிலிருந்து வெளியாகும் 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளி யிட்டுள்ளது.

அமெரிக்கா மேற்கொண்ட விமா னத் தாக்குதலின்போது தோரா போரா மலைக் குகைகளினுள் பதுங்கியிருந்த பின்லேடன் இப்போது அங்கிருந்து வெளியேறி பாகிஸ்தானின் எல்லைப் புறத்தில் அமைந்துள்ள கிராமம் ஒன் றில் மறைந்திருப்பதாகவும் அப்பத் திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

வெள்ளை மாளிகையின் உயர் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி வெளியிடப்பட்டிருக்கும் இச்செய்தி யில் சிறுநீரகக் கோளாறு காரணமா கப் பின்லேடன் மரணமடைந்துவிட்ட தாக முன்னர் வெளியான செய்திகள் தவறானவை எனவும் அவர் பாகிஸ்தா னின் எல்லையிலுள்ள கிராம ஒன்றில் பதுங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பின்லேடனையும் அவரது அல் கெய்டா அமைப்பையும் அழித்தொழிக் கும் நோக்குடனேயே அமெரிக்கா ஆப் கானிஸ்தான் மீது போர் தொடுத்தது. ஆனால் ஆப்கானிஸ்தான் போர் முடிந்துவிட்ட பின்னரும் பின்லேடன் உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்பதையே தீர்மானிக்க முடியாத நிலையில் அமெரிக்கா இருக்கிறது.

# ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் கொலம்பியாவில் கடத்தப்பட்டார்

புளோறின்னியா,பெப்.26

கொலம்பியாவில் எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சுயேச்சை வேட்பாளரான பெண் ஒருவரை மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளனர்.

இரண்டு குழந்தைகளின் தாயா ரான இங்கிட் பெடண்கோட் (வயது 40) என்பவரே கடத்தப்பட்டவராவார்.

தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டிலி ருந்து கடந்த சில நாள்களுக்கு முன் னரே படையினரால் விடுவிக்கப்பட்ட பகுதியூடாகச் சென்றுகொண்டிருந்த போது அவர் கடத்தப்பட்டதாகத் தெரி விக்கப்பட்டது.

15 தீவிரவாதிகள் அவரைக் கடத் திச் சென்றனர் என்றார் கொலம்பிய இராணுவப் பேச்சாளர்.

அவரைத் தேடிக்கண்டு பிடிக்கும் பணியில் கொலம்பிய இராணுவம் முழுமூச்சில் ஈடுபட்டுள்ளது. இந்தப் பணியில் இராணுவ ஹெலிகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

"அவர்கள் இராணுவத் தளத்தில் தங்கியிருந்த பின்னர் காலையில் புறப்பட்டுச் சென்றனர். இதுதவிர எங்களுக்கு மேலதிக தகவல்கள் எவையும் தெரிந்திருக்கவில்லை. இங்ரிட்டும் அவரது முகாமையாளரும் கடத்தப்பட்டதாகப் பின்னர் அறிந்து கொண்டோம்" - என்று கொலம்பிய இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (ம)



அங்கோலாவில் இராணுவத்துடனான மோதலில் கொல்லப்பட்ட ஜெனிற்றா இயக்கத்தின் தலைவர் சவிம்பியின் உடல் என்று தெரி வித்து அரசினால் வெளியிடப்பட்ட படமே இது.

# 4 மாநிலங்களின் தேர்தலில் பாரதிய ஜனதாவுக்கு தோல்வி

புதுடில்லி,பெப்.26

இந்தியாவின் நான்கு மாநிலங் களில் இடம்பெற்ற சட்டசபைத் தேர் தலில் பாரதிய ஜனதாக் கட்சி பெரும் தோல்வியடைந்துள்ளது.

உத்திரப்பிரதேசம், பஞ்சாப், உத் தராஞ்சல், மணிப்பூர் ஆகிய மாநிலங் களிலேயே இந்தத் தேர்தல் இடம் பெற்றது.

உத்தரப் பிரதேசத்தில் முலாயம் சிங் யாதவ் தலைமையிலான சமாஜ வாதிக் கட்சியும், பஞ்சாப்பிலும் உத் தராஞ்சலிலும் மணிப்பூரிலும் காங் கிரஸ் கட்சியும் தனிப் பெரும் கட்சி களாக வந்துள்ளன.

எனினும் உத்தரப் பிரதேசத்தில் மாயாவதியின் பகுஜன் சமாஜவாதி கட்சியின் ஆதரவுடன் ஆட்சியமைக்க பாரதிய ஜனதாக் கட்சி முயன்று வருகின்றது.

தன்னை முதலமைச்சராக்கினால் பாரதிய ஜனதாவுடன் இணைந்து ஆட்சி அமைக்கச் சம்மதம் என்று மாயாவதி கூறியுள்ளார். ஆனால் மாயாவதியை முதலமைச்சராக்கு வதற்கு பாதிய ஜனதாக் கட்சியின் உள்ளூர் தலைவர்கள் மறுப்புத் தெரி வித்துவருகின்றனர்.

அதேசமயம், உத்தரப்பிரதேசத் தில் தனிப்பெரும் கட்சியாக வெற்றி பெற்றுள்ள சமாஜவாதிக் கட்சி தனக்கே ஆட்சி அமைக்கும் உரிமை தரப்படவேண்டும் என்று கோரியுள் ளது. (ம)

# அரபாத் மீதான கட்டுப்பாடுகளை தளர்த்த இஸ்ரேல் தீர்மானம்!

ஜெருசலேம்,பெப்.26

பலஸ்தீனத் தலைவர் யஸீர் அர பாத்தை அவர் தற்போது தங்கி இருக்கும் ரமழா நகரில் இருந்து வெளி யேற அனுமதிப்பதில்லை என்று இஸ் ரேலிய அமைச்சரவை முடிவு செய்துள ளது. ஆனால் அரபாத்தை வீட்டுக் காவலில் இருந்து விடுவிப்பது என வும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இந்த முடிவுக்கு 14 உறுப்பினர் களைக் கொண்ட இஸ்ரேலிய அமைச் சரவைப் பாதுகாப்புக் குழுவில் 12 பேர் ஆதரவு தெரிவித்ததாகவும், இரு வர் எதிர்ப்புத் தெரிவித்ததாகவும், இஸ் ரேலிய வானொலி தெரிவித்தது.

இந்த முடிவை அடுத்து அரபாத் தின் வீட்டைச் சுற்றி நிறுத்திவைக் கப்பட்டுள்ள இஸ்ரேலிய டாங்கிகள் அங்கிருந்து விலக்கிக்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தீவிரவாதிகளுக்கு எதிராக நட வடிக்கை எடுப்பதற்கு அரபாத் தவறி னார் என்று குற்றஞ்சாட்டிய இஸ்ரே லிய அரசாங்கம், கடந்த சில மாதங் களாக ரமழாவிலுள்ள தனது வீட்டி லிருந்து வெளியேற அரபாத்துக்கு தடைவிதித்திருந்தது.

இஸ்ரேலின் இந்த நடவடிக்கைக்கு உலக நாடுகள் - குறிப்பாக மேற்கு நாடுகள் - பெரும் கண்டனங்களைத் தெரிவித்து வந்ததுடன் அரபாத்தை வீட்டுக் காவலில் இருந்து விடுவிக் குமாறு இஸ்ரேலிய அரசுக்கு அழுத் தம் கொடுத்து வந்தன.

இந்த அழுத்தம் காரணமாகவே அரபாத்தை ரமழா நகருக்குள் மட்டும் நடமாட அனுமதிப்பதற்கு இஸ்ரேலிய அமைச்சரவை தீர்மானித்தது என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.


இஸ்ரேலிய அமைச்சரவையின் இந்தத் தீர்மானத்துக்கு பலஸ்தீன அதிகார சபை கடும் கண்டனம் தெரி வித்துள்ளது.

இதன் மூலம் ஏற்படும் வன்முறை கள் அனைத்துக்கும் இஸ்ரேலே பொறுப்பு என்றும் பலஸ்தீன அதிகார சபை கூறியுள்ளது. (ம-4)

## ஈராக் மீதான தாக்குதல் குறித்து விவாதிக்க

# பிரிட்டிஷ் - அமெ. தலைவர்கள் மே மாதம் சந்தித்துப் பேசுவர்!

லண்டன்,பெப்.26




பயங்கரவாதத்துக்கு எதிரான போரில அடுத்த இலக்கு ஈராக் என்று அமெரிக்கா கூறுவரும் நிலையில் -

ஈராக்குக்கு எதிராக எடுக்கவுள்ள இராணுவ நடவடிக்கைகள் குறித்து அமெரிக்க அதிபர் புஷ்ஷும் பிரிட் டிஷ் பிரதமர் ரொனி பிளயரும் எதிர்வரும ஏப்ரல் மாதமளவில் சந்தித்துப் பேச உள்ளனர்.

லண்டனில் இருந்து வெளியாகும் ஒப்ஸேவர் பத்தி ரிகை இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

பேரழிவு தரும் ஆயுதங்களை ஈராக் தொடர்ந்து உற் பத்தி செய்து வருவதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டுகின் றது. இதனை ஈராக் தொடர்ந்து மறுத்துவருகின்றது.

இதனால் ஈராக்குக்கு எதிராகப் போர் தொடுக்கும் முஸ்தீபுகளில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. இந்த முயற்சிக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக வும், ஈராக் மீதான போர் குறித்து இறுதி முடிவு எடுப்பதற்காகவும் இரு நாட்டுத் தலைவர்களும் சந்தித்துப் பேச உள்ள தாக லண்டனில் உள்ள உயரதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி ஒப்ஸேவர் தெரிவித்துள்ளது.



ஆனால் ஈராக்குக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு பிரிட்டிஷ் மக்கள் எதிர்புத் தெரிவித்துள்ளனர். ஈராக்கின் அணுசக்தி தகுதி பற்றிய ஆதாரங்களை விவரமாக வெளியிடுவதன் மூலம் இந்த எதிர்ப்பைச் சமாளிப்பதற்கு பிரிட்டிஷ் அரசு திட்டமிட்டுள்ளது. (ம)

## கிளர்ச்சித் தலைவர் கொல்லப்பட்டதை அடுத்து

# அங்கோலா உள்நாட்டு மோதல் முடிவுக்குக் கொண்டுவரப்படும்

ருவாண்டா,பெப்.26

அங்கோலாவின் ஜெனிற்றா இயக் கத் தலைவர் ஜொனாஸ் சவிம்பி மோதலில் கொல்லப்பட்டதை அடுத்து அங்கு இடம்பெற்றுவரும் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு விடும் என்று எதிர்பார்க்கப்படுகின் றது.

ஜெனிற்றா இயக்கத்தில் சவிம் பிக்கு அடுத்தபடியான முக்கிய தலை வர் எவரும் இல்லை. இதனால் இயக கத்தின் தலைமைப் பதவியைக் கைப் பற்றுவதில் அடுத்தமட்டத் தலைவர் களிடையே போட்டி ஏற்பட்டு இயக் கம் சின்னாபின்னப்பட்டுப்போகும் என் கிறார்கள் அவதானிகள்.

இதனால் அங்கோலாவின் உள் நாட்டுப் போர் ஒரு நிச்சயமற்றதன் மையை அடைந்துள்ளது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

இந்த நிலையில் ஜெனிற்றாவுக்கு எதிரான நடவடிக்கைகளை அரச படைகள் தீவிரப்படுத்தியுள்ளன.

"ஜெனிற்றாவுக்கு எதிரான எமது போரில் இராணுவத்தின் வெற்றி தவிர்க்க முடியாதது" - என்று அங் கோலா ஜனாதிபதி எடுவார்டோ டொசன்டோஸ் தெரிவித்தார். (ம)

# போதை மருந்து கடத்திய வயோதிபப் பெண் கைது!

லண்டனிலிருந்து மியாமிக்கு வந்த விமானத்தில் போதை மருந்து கடத் திய 81 வயதான வயோதிப மாது ஒருவரை சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கால்கள் முடமானவர் என்ற போர் வையில் சக்கர நாற்காலியில் அமர்ந்த வாறே விமானத்தில் அந்தப் பெண் பயணம் செய்துள்ளார்.

தனது இந்த நிலையை பார்த்து அதிகாரிகள் சோதனையிடாமல் விட்டு விடுவார்கள் என்ற நினைப்பில் தான் எடுத்து வந்த சூட்கேஸில் பத்தாயி ரம் போதை மாத்திரைகளை அவர் எடுத்து வந்துள்ளார்.

ஆனால் துரதிஷ்டவசமாக மியாமி விமான நிலையத்தில் அவரது சூட் கேஸை சோதனையிட்ட சுங்க அதி காரிகள் போதை மாத்திரைகளை கண்டுபிடித்தனர்.

இதனையடுத்து அந்தப் பெண் ணும் அவரது 56 வயதான காதல னும் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

## போக்குவரத்தை கட்டுப்படுத்த பிரிட்டனில் புதிய திட்டம்!

பிரிட்டனின் வீதிகளில் வாகனப் போக்குவரத்து நெரிசல் மிக மோச மாக அதிகரித்துள்ளது. இதனால் போக்குவரத்து நெருக்கடியை கட்டுப் படுத்துவதற்கு புதிய பல சட்ட திட் டங்களை அறிமுகப்படுத்துவதற்கு பிரிட்டிஷ் அரசு தயாராகி வருகின் றது.

இதனடிப்படையில் போக்குவரத்து நெரிசல் மிகுந்த வீதிகளில் பய ணம் செய்யும் கார்களுக்கு வரி அற விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் படி கார்க ளில் கறுப்புப் பெட்டி ஒன்று பொருத் தப்படும். இந்த கறுப்புப் பெட்டிகள் பொருத்தப்பட்ட கார்கள் நெரிசல் மிகுந்த வீதிகளில் பயணிப்பதை வானில் இருக்கும் செய்மதிகள் அவ தானித்து கட்டுப்பாட்டு நிலையத் துக்கு தகவல் தரும். இந்த தகவலின் அடிப்படையில் கார் உரிமையாளரிடம் இருந்து வரி அறவிடப்படும். (ம)



நேபாளத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் அண் மைக்காலமாக அதிகரித்து வருகின்றன. இதனால் நாடு முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. சோதனை நட வடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

நேபாள வீதியொன்றில் செல்லும் இரு மோட்டார் சைக்கிள் பயணி களை மறித்து திடீர் சோதனை நடத்தும் படையினரை படத்தில் காணலாம். தீவிரவாதிகளின் அண்மைய தாக்குதல்களுக்கு பதில ளிக்கும் வகையில் இராணுவத்தினர் நடத்திய பல்வேறு தாக்குதலில் 37 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக அரசு அறிவித்துள்ளது.

### பனை அபிவிருத்திச் சபை
## பனங்கூழ் பிரியர்களுக்கு ஒரு நற்செய்தி!

இதுவரை காலமும் எமது பனம் பொருள் உற்பத்தி நிலையத்தில் புதன்கிழமை மட்டும் இடம்பெற்ற பனங்கூழ் விற்பனை தற்போது வாரத்தில் இரு தினங்கள் இடம்பெற்று வருகின்றன.

புதன், சனி ஆகிய இரு தினங்களிலும் கூழைப்பருகி இன்புறுங்கள்.

இத்தினங்கள் விடுமுறைத் தினமாக இருப்பினும் விற்பனை நடைபெறும்.

**மரக்கறிக் கூழ் - 20 ரூபா** **மீன் கூழ் - 30 ரூபா**

*இல.05, சோமசுந்தரம் அவனியு,*
*யாழ்ப்பாணம்.* (கச்சேரி அருகாக)

பொ.சிவபாதம்
தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை. (சி-20868)



## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

The interview for the following posts scheduled for Tuesday, 26.02.2002 at 10.00 a.m. has been postponed to Thursday, 28.02.2002 at 1.30 p.m.

1. Post of Senior Lecturer Grade II/Lecturer (Probationary) in Bio chemistry.
2. Post of Lecturer (Probationary) in Anatomy.

*Registrar,*
*University of Jaffna,*
*Sri Lanka.*
*25.02.2002.*


# வல்வை பொலிஸ் நிலையம் அருகில் வீட்டில் திருடர்கள் கைவரிசை!

வல்வெட்டித்துறை பொலீஸ் நிலையத்திற்குச் சமீபமாக திருடர்கள் கடந்த ஞாயிறு இரவு தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

சம்பவ தினத்தன்று நள்ளிரவு வேளை மதிலுக்கு மேலால் ஏறி வீட்டு வளவுக்குள் நுழைந்த திருடர்கள் விறாந்தையில் வைக்கப்பட்டிருந்த பெறுமதியான பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளனர். மட்டுவிலில் இருந்து இடம்பெயர்ந்து வல்வெட்டித்துறையில் தங்கியிருந்த ஒருவரது வீட்டிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டின் மின் குமிழ்களைக் கழற்றி எடுத்துவிட்டு அங்கிருந்து சில தளபாடங்கள், சுவர் மணிக்கூடு, தண்ணீர் பரல், சில்வர் பாத்திரங்கள் போன்றன திருடிச் செல்லப்பட்டன என்று வல்வெட்டித்துறை பொலீஸில் முறையிடப்பட்டுள்ளது. (க-31-ரி)

## மத்தியஸ்தர் சங்க கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.26

யாழ்.கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று மாலை 4 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

15,17 வயதுக்கு உட்பட்ட பாடசாலை கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான ஆட்டங்களுக்கு மத்தியஸ்தம் வகித்தல் மற்றும் விதிமுறைகள் தொடர்பான பல விடயங்கள் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்படும் என யாழ்.கிரிக்கெட் மத்தியஸ்தர்சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (க-7)

## காணி பதிவுகள் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,பெப்.26

யாழ். செயலக வளவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்டடத்துக்கு காணிப் பதிவகத்தை மாற்றும் நடவடிக்கைகள் தற்பொழுது இடம்பெற்றுவருகின்றன.

இதன் காரணமாகப் பதிவுகள் யாவும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் -

விரைவில் மீள ஆரம்பிக்கும் திகதி பற்றி அறிவிக்கப்படும் எனவும் -

யாழ். மாவட்ட உதவிப் பதிவாளர்நாயகம் ந. சதாசிவஐயர் தெரிவித்துள்ளார். (க-10)


## யாழ். வண்ணை கன்னாதிட்டி
# அருள்மிகு அன்னை காளியம்பாள் ஆலய
# தேர்த்திருவிழா



இன்று (26-02-2002)
செவ்வாய்க்கிழமை
அன்னை காளியம்பாள்
சித்திரத்தேரிலே சிங்காரப்
பவனிவந்து அடியார்கள்
குறைதீர்த்து சாந்தியும்,
சமாதானமும் பெருக
அருள்பாலிக்க வேண்டியும்,
தேர் உற்சவம் காணவரும்
அடியார்களையும்
வாழ்த்தி நிற்பவர்கள்:

**கவியரசு நகைப்பூங்கா**
190, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ லஷ்மி ஜீவல்லர்ஸ்**
220, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ரமேஸ் நகைத் தொழிலகம்)

**பிருந்தா ஜீவல்லர்ஸ்**
295, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**சுகன்யா நகையகம்**
DR. வீதி, சுன்னாகம்.

**R.G. மெசின் கட்டிங்**
273, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ கார்த்திகா நகைத் தொழிலகம்**
301, கன்னாதிட்டிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

**ஜெய துர்கா நகைத் தொழிலகம்**
ஸ்ரேசன் வீதி, மல்லாகம்.

**விஜயன் நகைத் தொழிலகம்**
58, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

**தினேஸ் நகைத் தொழிலகம்**
53/7, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

**சுரேஸ் நகைத் தொழிலகம்**
103, கஸ்தூரியார் வீதி (மேல்மாடி),
யாழ்ப்பாணம்.

**பன்னீர்ச்செல்வன் நகைத் தொழிலகம்**
203/12, K.K.S.வீதி,
யாழ்ப்பாணம்.

**தேவன் நகைத் தொழிலகம்**
29, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

**சிவனேசன் நகைத் தொழிலகம்**
224/42, கஸ்தூரியார் வீதி,
பாரத் ஸ்ருடியோ லேன், யாழ்ப்பாணம்.

**விஷ்ணு நகைத் தொழிலகம்**
224/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**சுதா நகைத் தொழிலகம்**
90, சிவன் வடக்கு வீதி, யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ வெங்கடேஸ் நகைத் தொழிலகம்**
228/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**சுவிஸ்சோ நகைத் தொழிலகம்**
44/1, யாழ். வீதி, யாழ்ப்பாணம்.

**பாலகிருஷ்ணன் நகைத் தொழிலகம்**
337, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**ஈஸ்வரன் நகைத் தொழிலகம்**
173/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**ஒலிம்பிக் நகைத் தொழிலகம்**
சந்திரசேகரம் (சின்னமணி)
190/6, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**K.புவனேந்திரன் நகைத் தொழிலகம்**
58, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

**இரத்தினம் நகைத் தொழிலகம்**
190/7, கணேசா உட்புறம், கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**தயா நகைப் பூங்கா**
213C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**ஜனா நகைத் தொழிலகம்**
117, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C/20870)



# சேவைநலன் பாராட்டுவிழா



சுகாதாரத் திணைக்களத்தில் அளப்பரிய
சேவையாற்றி இளைப்பாறும்
உயர்திரு.
## கந்தையா செகராசா
*(பொதுச் சு. வெ. உத்தியோகத்தர்)*

அவர்களின் சேவைநலன் பாராட்டு வைபவம் நாளை (27.02.2002) புதன்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்.கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் (மார்பு சிகிச்சை நிலையத்துக்கு அருகில்) நடைபெறவிருப்பதால் சக உத்தியோகத்தர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

யாழ்.பிராந்திய தேசிய பொதுச் சுகாதார
வெளிக்கள உத்தியோகத்தர் சங்கம்
*(ஏற்பாட்டாளர்கள்)*
*யாழ்ப்பாணம்.* (1117)



### யா/இணுவில் மத்திய கல்லூரி
## இல்ல மெய்வன்மைப் போட்டி - 2002

*தலைவர்* : திரு.துரை எங்கரசு (அதிபர்)
*இடம்* : கல்லூரி மைதானம்
*காலம்* : நாளை (27.02.2002) புதன் பிற்பகல் 2.00 மணி
*பிரதமவிருந்தினர்* : திரு.வி.இராசையா அவர்கள்
*(கல்விப் பணிப்பாளர், வலிகாமம் வலயம்)*
*சிறப்புவிருந்தினர்கள்* : திரு.வி.பாலசிங்கம் அவர்கள்
*(உதவிக் கல்விப் பணிப்பாளர், உடற்கல்வி, வலிகாமம் வலயம்)*
: திரு.ஆர்.கைலைநாதன் அவர்கள்
*(அதிபர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி)*
*கௌரவவிருந்தினர்* : திரு.க.ஸ்ரீகணேசன் அவர்கள்
*(ஆங்கில விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகம்)*
*பரிசில் வழங்கல்* : பிரதம விருந்தினர்
*நன்றியுரை* : விளையாட்டுச் செயலர்

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

(1118) - கல்லூரி கல்விச் சமூகம்.



### பனை அபிவிருத்திச் சபை
## மாபெரும் பனைவளக் கண்காட்சி

எதிர்வரும் சித்திரை மாத நடுப்பகுதியில் மாபெரும் பனைவள உற்பத்திப் பொருள் கண்காட்சி ஒன்றை யாழ்.மத்திய கல்லூரியில் நடத்துவதற்கு பனை அபிவிருத்திச் சபை தீர்மானித்துள்ளது.

இக்கண்காட்சி பாடசாலை மாணவர்களினதும், இந்த வளம் தொடர்பான உற்பத்தியாளர்களின் நன்மை கருதியும், செய்முறைக் கண்காட்சியாகவும் நடைபெறும்.

இக்கண்காட்சியில் பனைசார் உணவு உற்பத்தி, பனைசார்ந்த கைப்பணி உற்பத்தி, பனைமர உற்பத்தி எனத் தனித்தனியாகக் காட்சி அறைகள் அமைக்கப்படும். தரமான உற்பத்திகளுக்கு ஒவ்வொன்றிலும் (03) மூன்றுக்குக் குறையாத பரிசில்களும், ஏனைய பங்குபற்றும் ஸ்தாபனங்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இக்கண்காட்சியில் கலந்துகொள்ள விரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும்.

தலைமைக்காரியாலயம்,
*53, கண்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (சி-20869)

பொ.சிவபாதம்
தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை.


# மரண அறிவித்தல்

## சின்னையா தருமலிங்கம்

புங்குடுதீவு, 9ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்சமயம் கொழும்பு முகத்துவாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா தருமலிங்கம் 24.02.2002 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - செங்கமலம் தம்பதியினரின் அன்பு மகனும் கணபதிப்பிள்ளை - பராசக்தி தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராசமணியின் பாசமிகு கணவரும் கனகம்மா, காலஞ்சென்ற சண்முகம் மற்றும் சிவகாமி, சிதம்பரநாதன் (பக்லோன் களஞ்சியம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகோதரரும் ஜெயலட்சுமி (கொழும்பு), முருகமூர்த்தி (சுவிஸ்), விக்னேஸ்வரமூர்த்தி (லண்டன்), விநாயகமூர்த்தி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.02.2002) புதன்கிழமை பொரளையிலுள்ள கனத்தை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.சிதம்பரநாதன்
(சகோதரர்)

*93, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (1120)

உதயன்

## இந்துக்களுக்கு தலைக்குனிவு

குடாநாட்டில் நிர்வாகப் பிணக்குகள் மற்றும் இழுபறிகளில் சிக்கி இருக்கும் இந்து ஆலயங்களை சுவீகரிக்க வகைசெய்யும் சட்ட மூலம் ஒன்றை நாடாளுமன்றத்தில் கொண்டுவர இந்துகலாசார அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாகச் செய்தி வெளியாகியிருக்கிறது.

குடாநாட்டில் உள்ள பல இந்து ஆலயங்கள் தொடர்பான பிணக்குகள் நீதிமன்ற விசாரணைகளில் உள்ளன. அத்தகைய ஆலயங்களைச் சரிவர நிர்வகிக்க வசதியாகவே இத்தகைய சட்டம் ஒன்றை அமுலுக்குக் கொண்டுவருவது குறித்து தமது அமைச்சு பரிசீலித்து வருவதாக இந்து விவகார அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

ஆலயங்கள் சம்பந்தப்பட்ட சர்ச்சைகள் நீதிமன்றம்வரை செல்லும் சம்பவங்கள் அதிகரித்திருக்கின்றன. பல கோவில்களின் பரிபாலனம் நீதிமன்றத்தின் கண்காணிப்புடன் நடத்தப்பட்டு வருகின்றது.

சமூக விரோதச் செயல்கள் தொடர்பான பல்வேறு பிணக்குகளுக்குமத்தியில் ஆலயங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளையும் சமாளிக்க வேண்டிய நிலைமை நீதிபரிபாலனத் துறையினருக்கு ஏற்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆலயங்களுக்குக் குறைவில்லை. ஒரு சிறிய ஊரிலேயே குறைந்தது பத்துக்கு மேற்பட்ட ஆலயங்கள் இருக்கும். ஆனால் அவையெல்லாம் அப்பகுதியில் வாழ்கின்ற சைவத் தமிழ் மக்களின் ஆன்மீக நாட்டத்தை, பக்தி மார்க்கத்தைப் பிரதிபலிக்கின்றன என்று பெருமைப்படுவதற்கில்லை.

காரணம் ஆலயங்கள் ஆன்மாவை ஆற்றுப்படுத்தி, மும்மலங்களைத் துறந்து, ஆண்டவன் அருள்வேண்டி, அவனை நாடி வணங்கும் புனிதமான இடங்களாக அன்றி பொறாமையும், பூசலும், சச்சரவும் மலிந்த இடங்களாகிவிட்டன.

'நான்' என்ற அகங்காரம் நீக்க வேண்டிய ஸ்தலங்கள் பல 'நான்'களை உருவாக்கும் கோவில்களாக மாற்றப்பட்டுவிட்டன.

ஆலயம் யாருக்குச் சொந்தமானது; பரிபாலனம் எவரிடம் இருக்க வேண்டும்; வருமானத்தை யார் கையாளவேண்டும் என்பன குறித்த பிணக்குகளுக்கும் குறைவில்லை.

ஆலயங்கள் அதிக வருமானம் தரும் இடங்களாக இருப்பதும் புனரமைப்பு மற்றும் திருப்பணிகள் என்ற பெயரில் அதிக நிதி உதவிகள் இலகுவில் கிடைக்கக் கூடிய வாய்ப்புக்கள் இருப்பதும்தான் ஆலயங்கள் சம்பந்தப்பட்ட பிணக்குகளுக்கு முக்கிய காரணமாகின்றன.

தெய்வகாரியத்துக்கும் தர்மச் செயல்களுக்கும் பயன்படுத்தப்பட வேண்டிய நிதியை 'சுருட்டிக் கொள்வதிலேயே' பலரும் மோதிக்கொள்கிறார்கள்.

இத்தகைய காரணங்களினாலேயே பிணக்குகளுக்குத் தீர்வுதேடி நீதமன்றங்கள் வரை செல்லும்நிலை தோன்றியிருக்கிறது.

பரிபாலனச் சண்டைகளாலும் வழக்கு விசாரணைகளாலும் பல ஆலயங்கள் பூசை வழிபாடு தடைப்பட்ட நிலையில் உள்ளன. புனரமைப்புப் பணிகள்கூட நிறுத்தப்பட்டிருக்கின்றன.

இந்தநிலை சைவத்துக்கும், தமிழுக்கும் பெரும் இழுக்காகும்.

ஆலயங்களில் இடம்பெறும் நிர்வாக, நிதிச் சண்டைகளுக்கு முற்றுப் புள்ளிவைக்க சட்டங்கள், ஒழுங்கு விதிகள் உதவுமா, அவை அவசிய தேவைகள்தானா என்பதை ஒவ்வொரு இந்துவும் சிந்திக்கவேண்டிய கட்டம் இது.

ஆலய விவகாரங்களில் பொலீஸார் மற்றும் சட்டத்தை நிலைநாட்டுவோர் தலையிட இடமளிப்பது சமய நெறிக்கு ஒவ்வாதது.

ஆலயங்களை அரசு சுவீகரிக்க இடமளிப்பது இந்த நாட்டின் சைவத் தமிழ்மக்கள் அனைவருக்குமே அவமானத்தையும் தலைக்குனிவையும் ஏற்படுத்திவிடும். எனவே ஆலயங்களைப் புனித இடமாக்கி சமயத்தின் பெருமையை நிலைநாட்ட மக்கள் தாமாகவே முன்வரவேண்டும்.

ஆலயங்கள் தொடர்பாகச் சச்சரவுப்படுவோர் - அடிபிடிப்படுவோர் - இதனை உணர்வதும், உணர்ந்து செயற்படுவதும் எப்போது?

தென்மராட்சி நலச்சேவைகள் சங்கம்

# மீளக் குடியமர்ந்த மக்களின் தேவைகள் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம்,பெப்.26

தென்மராட்சியில் மீளக்குடியமர்ந்துவரும் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்வதில் சகல தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

- இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது தென்மராட்சி நலச்சேவைகள் சங்கம்.

மேற்படி சங்கத்தின் செயற்குழுக கூட்டம் அண்மையில் சங்கத் தலைவர் பேராசிரியர் க.கந்தசாமி தலைமையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அங்கு நிறைவேற்றப்பட்ட ஏனைய முக்கிய தீர்மானங்கள் வருமாறு:-

☆ மீளக் குடியமர்ந்துவரும் மக்கள் தமது ஓய்வூதியம், நிவாரணம் ஆகியவற்றைப் பெறுவதில் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும்.

☆ சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையை மீண்டும் சொந்த இடத்தில் இயங்கவைக்க நடவடிக்கை எடுத்தல். இதுகுறித்து மாகாண பிரதி சுகாதாரப் பணிப்பாளருடன் பேச்சு நடத்துதல்.

☆ சாவகச்சேரி பொதுச் சந்தையைப் புனரமைத்தலும், மீண்டும் சந்தையை பழைய இடத்தில் இயங்க வைக்க நடவடிக்கை எடுத்தலும்.

☆ சாவகச்சேரி நகரத்தில் இயங்கிய வர்த்தக நிலையங்களை மீண்டும் இயங்க வைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு சாவகச்சேரி வணிகர் கழகத்திடம் கோருதல்.

☆ மறவன்புலோ, தனங்களப்பு பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களை பயிர்ச் செய்கைக்கு அனுமதிப்பது குறித்து சம்பந்தப்பட்ட பிரதேச படை அதிகாரிகளுடன் பேச்சு நடத்துதல்.

☆ படையினரால் எடுத்துச்செல்லப்பட்ட சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி கமநலசேவைகள் திணைக்களத்துக்குச் சொந்தமான உழவு இயந்திரங்களை மீளப் பெறுவது குறித்து படைத்தரப்புடன் பேச்சு நடத்துதல்.

இதேவேளை -

மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்ட சாவகச்சேரி வணிகர்கழக பிரதிநிதிகள் வர்த்தக நிலையங்களை மீள இயங்கவைப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதாகத் தெரிவித்தனர்.

(க-7)

## நாட்டு நடப்பு

### அக்கரை நாகரிகம் !!

பருவமகள் பதினான்கு எய்தி
பள்ளிக்குப் போகும் போது
கருத் தரியாது இருப்பதற்கு
கையினில் குளிகை தந்து
உருக்கமாய் தாயாள் சொன்னவாறு
உத்தமி நாளும் குளிகையுண்ணும்
அரும்பெரும் பண்பெல்லாம் உண்டாம்
அமெரிக்க நாட்டில் என்றார் –

பெருமை சேர் யுவதிகள் இங்கு
பேணுறார் கற்பை என்ற
அரும்பெரும் செய்தி கேட்க
ஆறுதல் அடையுது உள்ளம்
உருகுது உள்ளம் அம்மா
உன்கற்பினை எண்ணும்போது
பெருமைசேர் தமிழர் பண்பை
பேணிடும் பெண்ணே வாழ்க!
ஊரதும் உலகும் உன்தன்
உயர் கற்பினை போற்றுதன்றோ?

- விகடகவி

# ஆரம்பக் கல்வி மாணவரின் நலன்களில் பெற்றோரின் பங்கு அளப்பரியது

## பாலர் விளையாட்டு விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம்,பெப்.26

ஆரம்பக் கல்வி மாணவர்களின் நலன்களைக் கவனிப்பதில் பெற்றோரின் பங்கு அளப்பரியது.

- இவ்வாறு தெரிவித்தார் சர்வோதயத்தின் செயற்றிட்ட நிறைவேற்று அலுவலர் எஸ்.சங்கரப்பிள்ளை.

கட்டைப்பிராய் சரஸ்வதி பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் சரஸ்வதி சனசமூக நிலையத் தலைவர் க.குணராசா தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எஸ்சங்கரப்பிள்ளை தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

புதிய கல்விச் சீர்திருத்தத்தின்படி விளையாட்டுடன் இணைந்த கல்வியே முக்கியத்துவம் பெறுகின்றது.

ஒரு பிள்ளை தனது ஆரம்பக் கல்வியை முதலில் வீட்டிலேயே பெற்றுக்கொள்கின்றது. அதன் பின்புதான் முன்பள்ளிகளில் கல்வியைத் தொடர வாய்ப்பு அளிக்கப்படுகின்றது.

முன்பள்ளிகளிலும் நாளாந்தம் 4 அல்லது 5 மணி நேரமே கல்வியும், விளையாட்டும் கற்பிக்கப்படுகின்றன. எனவே மிகுதியான நேரங்களில் பெற்றோரின் அரவணைப்பிலேயே பிள்ளைகள் இருக்கின்றனர். இதனாலேயே ஒரு பிள்ளை நல்லவன் ஆவதும் கெட்டவன் ஆவதும் அன்னை வளர்ப்பிலேயே என்று கூறப்படுகிறது.

பிள்ளைகளின் நலன்களில் பெற்றோர் கவனம் செலுத்தவேண்டும். காரணம் ஒருவருடைய கல்விக்கு அத்திபாரமாக அமைவது ஆரம்பக் கல்வியே.

இந்த ஆரம்பக் கல்விக்கு அத்திபாரத்தை இடுவதில் பெற்றோர்களோடு ஆசிரியர்கள், சனசமூக நிலையங்களின் உறுப்பினர்கள் பங்குகொள்ள வேண்டும்.

ஆரம்ப காலங்களைவிட தற்போது பிள்ளைகளின் அறிவுத்திறன் வளர்ச்சியடைந்து பெற்றோர்கள், பெரியவர்களிடம் தாமாகவே கேள்வி கேட்கும் ஆற்றல்களைப் பெற்றுள்ளனர்.

இந்தத் திறமைகள் விளையாட்டுடன் இணையும்போதே பிள்ளைகள் சிறந்த மனிதர்களாக உருப்பெறுகின்றனர் - என்றார்.

வலி.கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் செ.குகதாசன், தலைவர் பூ.குணசிங்கம் மற்றும் விருந்தினர்களும் உரையாற்றினர்.

(க-7-180)

# நயினாதீவில் வரவேற்பு விழா

யாழ்ப்பாணம்,பெப்.26

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன், சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சிவஸ்ரீ சம்புகேஸ்வர மகேஸ்வரக் குருக்கள் ஆகியோருக்கு இன்று நயினாதீவில் வரவேற்பு அளிக்கப்படவுள்ளது.

நயினாதீவு - தம்பகைப்பதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத ஸ்ரீ வீரபத்திரசுவாமி ஆலய முன்றிலில் இந்த வரவேற்புவிழா இடம்பெறவுள்ளது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், வடக்கு-கிழக்கு மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி, கூட்டுறவு கைத்தொழில் அமைச்சின் செயலாளர் க.பரமலிங்கம் ஆகியோர் இந்த வரவேற்பு விழாவில் விசேட விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

(க-7)

குடாநாட்டில் நாளுக்குநாள் அதிகரித்துவரும்

# சைக்கிள், மோ.சைக்கிள் திருட்டைத் தடுக்க பொலீஸ் அதிகாரி கூறும் ஆலோசனைகள்

யாழ்ப்பாணம்,பெப்.26

குடாநாட்டில் அண்மைக்காலமாக அதிகரித்துவரும் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் திருட்டுக்களைத் தடுப்பதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பை நாடியுள்ளார். யாழ். பொலஸ் நிலைய சிரேஷ்ட பொலஸ் அதிகாரி பி.எம்.பேமரத்ன -

இந்தத் திருட்டுக்களை உடனடியாகத் தடுத்துநிறுத்துவதற்கு பொது மக்கள் கடைப்பிடிக்கவேண்டிய சில வழிமுறைகளையும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

இதற்காக அவர் கூறும் ஆலோசனைகள் வருமாறு:-

☆ சைக்கிள்களுக்க பூட்டினைப் பொருத்திப் பொது இடங்களில் நிறுத்துதல்.

☆ மோட்டார் சைக்கிள்களுக்கு 'ஹாண்டில்' (HANDLE) பூட்டுக்களைப் பூட்டிப் பொது இடங்களில் நிறுத்துதல்.

☆ மோட்டார் சைக்கிள்களுக்கு 'ஹாண்டில்' பூட்டு இல்லாவிட்டால் இரும்புச் சங்கிலி ஒன்றைப் பாவித்து பூட்டினால் பூட்டுதல்.

☆ யாழ்ப்பாணத்தில் உள்ள மோட்டார் சைக்கிள்களில் அநேகமானவை இன்னும் பதிவுசெய்யப்படாமல் உள்ளன. இதனால் பொலீஸார் தேடுதல் மேற்கொள்ளும்போது உடைமையாளர்களை இலகுவாக இனங்கண்டு கொள்வதில் சிரமங்கள் ஏற்படுகின்றன. இதனைத் தவிர்க்க அனைவரும் தங்களின் மோ.சைக்கிள்களைப் பதிவுசெய்து கொள்ளுதல் அவசியமாகும்.

☆பொதுமக்களின் இயல்பு வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக இருக்கும் திருட்டுக்களைத் தடுப்பதற்கு பொலீஸார் பொறுப்புடன் நடவடிக்கை எடுத்துவரும் அதேசமயம், மேற்குறிப்பிட்ட நடைமுறைகளையும் கடைப்பிடித்து பொது மக்களை விழிப்பாக இருக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.(க-8)

# சட்டமாணி கற்கை; விண்ணப்பப் படிவம்

யாழ்ப்பாணம்,பெப்.26

திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்துக்கு மேலும் 100 சட்டமாணி கற்கைக்கான விணணப்பப் படிவங்கள் எடுத்துவரப்பட்டுள்ளன.

முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படவுள்ள இந்தப் படிவங்களை இன்று செவ்வாய்க்கிழமை தேவையான மாணவர்கள் பெற்றுக்கொள்ளலாம் என்று பிராந்திய நிலைய இயக்குநர் அறிவித்துள்ளார்.

இந்தப் படிவங்களை நாவலவில் உள்ள திறந்த பல்கலைக்கழகத் துணைவேந்தருடன் தொடர்புகொண்டு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் எடுத்துவந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சட்டமாணி கற்கைக்கான விண்ணப்ப முடிவு தினம் நாளை 27ஆம் திகதி ஆகும்.

(க-10)

# அறுவடை முடிந்துவிட்டதா? பயிரின தானியங்கள் தயார்!

யாழ்ப்பாணம்,பெப்.26

நெல் அறுவடை செய்யப்பட்ட பின்னர் பயிரிடக்கூடிய பல்வேறு தானியங்களை உடுவில் கமநல கேந்திர நிலையம் விவசாயிகளுக்கு வழங்கிவருகின்றது.

நிலக்கடலை, எள்ளு, பயறு, கௌப்பி ஆகிய தானிய வகைகளே இவ்வாறு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை -

நீர் இறைக்கும் இயந்திரங்கள், யூரியா பசளை என்பனவும், கரட், பீற்றூட், கறிமிளகாய், லீக்ஸ், டுபாய் பூசணி, முள்ளங்கி ஆகிய மரக்கறி விதைகளும் விவசாயிகளுக்கு இங்கு விநியோகிக்கப்படுகின்றன.

(க-7)

## நாளை

மாசி 15
புதன்கிழமை
(27-02-2002)
திதி : பூரணை
பிற்பகல் 3.32 வரை.
நட்சத்திரம் : மகம்
பிற்பகல் 1.06 வரை
மாசிமக நன்னாள்
பூரணை விரதம்
சுபநேரம் : 4.59 - 6.29
ராகுகாலம் : 12.29 -
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு


தான் தவிர்க்க முயலும் வழியில்தான் ஒருவன் தன்விதியைச் சந்திக்கிறான்.



சர்வதேச ஊனமுற்றோர் தினத்தை ஒட்டி பளைப் பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட நிகழ்வில் யாழ். வை.எம்.சீ.ஏ. தலைவர் டி.ஆர்.அருமைநாயகம் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் பளைப் பிரதேச செயலர் சு.புத்திசிகாமணி, கைதடி நவீல்ட் பாடசாலை அதிபர் திருமதி சீ.பத்மபாலன் ஆகியோர் உள்ளனர்.

(படம்: தென்மராட்சி செய்தியாளர்)

இப்பிரசாரத்திற்கான அனுசரணை : ஜப்பானிய மக்கள்




# எதிர்காலத்தில் சிறந்த சுகாதார நலன்

யுத்த நிறுத்தத்தின் முன்னர், போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அடிப்படை மருந்துகள் கூட வருவது அரிதாக இருந்தது. வன்னியில் நாளாந்தம் சுமார் 100 பேர் மலேரியாவால் பாதிக்கப்பட்ட போதிலும், அங்கு மலேரியாத் தடுப்பு மருந்தைப் பெறுவது கடினமாக இருந்தது. இன்று இந்நிலை மாறி, முன்னரிலும் பார்க்க அங்கு மருந்து வகைகள் தாராளமாகக் கிடைக்கின்றன. இம்மாற்றம் அங்கு வாழும் மக்களின் மனதில், தாம் சிறந்த ஆரோக்கிய வாழ்வை அமைக்க முடியுமென்ற நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது. சிந்தியுங்கள்! யுத்தத்திற்காகச் செலவிடப்பட்ட பணம், சுகாதாரத் துறையை அபிவிருத்தி செய்யப் பயன் படுத்தப்பட்டிருந்தால், நாடு முழுவதும் மேலும் பல வைத்தியசாலைகளையும், சிறந்த மருத்துவ வசதிகளையும், எமது சிறுவர்களுக்குப் போதிய போஷாக்கையும் நாம் பெற்றிருப்போம். சமாதானம் ஏற்பட்டால் இந்நிலை நிச்சயம் உருவாகும். இறுதியில் இப்போது, இன, மத ரீதியான தடைகளைத் தாண்டி ஒரே தேசத்தவர்களாக ஒன்று படுகின்றோம். ஒன்று பட்டே நிரந்தரத் தீர்வைக் காண ஓயாது நாம் உழைப்போம். ஒளிமயமான எதிர்காலம் தெரிகின்றது. சமாதானத்தின் பயன்களை அறுவடைசெய்ய சளைக்காது நாம் பாடுபடுவோம்.

www.srilankafirst.com

ஸ்ரீலங்கா First

இன்றே செய்வோம் அன்றேல் என்றும் இல்லை

# சாவகச்சேரியில் மணல் அகழ்வதை தடுத்து நிறுத்துமாறு கோரி கடிதம்

யாழ்ப்பாணம்,பெப்.26

சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் இருந்து மணல் அள்ளுவதை உடனடியாகத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையா யாழ். அரச அதிபரைக் கேட்டுள்ளார்.

அரச அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே இந்தக் கோரிக்கையை அவர் விடுத்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தென்மராட்சிப் பகுதி கடந்தகால சம்பவங்களால் சீரழிந்துபோயுள்ளது. அந்தப் பிரதேசத்தைக் கட்டி எழுப்புவதற்கு பெருமளவு மணல் தேவையாக உள்ளது.

இந்நிலையில் பிரதேச சபையின அனுமதியின்றி சில அரசியல்வாதிகளின் உதவியுடன் கச்சாயில் இருந்து தினமும் மணல் அள்ளப்படுகின்றது. இதை உடன் தடுத்துநிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி ஆணையாளர், தென்மராட்சி பிரதேச செயலர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், இராணுவ அதிகாரிகள், கொடிகாமம் பொலீஸ் பொறுப்பதிகாரி ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

மணல் அள்ளுவதை நிறுத்தாவிட்டால் அதற்கு எதிராக வெகுஜனப்போராட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் அன்ரன் பொன்னையா தெரிவித்தார். (ஐ-3)




யாழ்.றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் அதன் தலைமையகத்தில் வியாழனன்று இடம்பெற்ற அதிதிகள் உரைநிகழ்வின்போது எடுக்கப்பட்ட படங்கள்.

கொழும்பு மேற்கு றோட்டறிக் கழகத்தின் முன்னாள் தலைவர் ஜானக எதிரிசிங்க உரையாற்றுவதை முதலாவது படத்தில் காணலாம். அருகே யாழ்.றோட்டறிக் கழகத்தின் முன்னாள் தலைவர் அ.பஞ்சலிங்கம் காணப்படுகின்றார்.

குருநாகல் றோட்டறிக் கழகத்தின் முன்னாள் தலைவர் மார்ட்டின் டி சில்வா உரையாற்றுவதை இரண்டாவது படத்தில் காணலாம். (க-180)

# இனப்பிரச்சினையின் வரலாற்றோடு நகர்ந்துசெல்லும் 'ஒரு காதலின் கதை'

இலக்கிய உலகில் இன்று முதலாம் இடத்தில் இருப்பது நாவல்தான்! நாம்வாழுகின்ற இந்த வாழ்க்கையைச் சித்திரித்தல், வாழ்க்கைப் பிரச்சினைகளை அலசுதல், வாழ்வுக்கு வழிகாட்டுதல், எல்லாவற்றையும் அழகிய மொழி நடையில் திறம்படச் செய்வது நாவலே!

தமிழகத்துச் சஞ்சிகைகள் போட்டி போட்டுக்கொண்டு தொடர்கதைகளைப் பிரசுரித்ததன் பயனாக தமிழ் மொழியிலும் நாவல் இலக்கியம் செழித்து வளர்ந்துள்ளது. இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள், தமிழகத்து நாவல்களையே விரும்பி வாசித்தாலும், இலங்கையிலும் பலர் நாவல்களை எழுதி வெளியிட்டுள்ளனர். அத்தகைய எழுத்தாளர்கள் பாராட்டுக்குரியவர்கள்!

அந்த வரிசையில் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையும் தான் ஒரு கொழும்பு வாரமலரில் தொடர்கதையாக எழுதிய 'ஒரு காதலின் கதை' என்ற நாவலை இப்பொழுது நூலுருவில் கொண்டுவந்துள்ளார்.

அராலியூரருக்கு அதிக அறிமுகம் தேவையில்லை. கடந்த இருபத்திரண்டு ஆண்டுகளாக இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்கள் எல்லோரும், அவரது வானொலி நாடகங்களைத் தான் கேட்டு மகிழ்ந்து கொண்டிருக்கின்றனர். சிறுகதை, நாவல், நாடகம், இலக்கிய விமர்சனம் என்று பலவகை இலக்கியங்களையும் படைத்துள்ள சுந்தரம்பிள்ளை பதின்மூன்று நூல்களின் ஆசிரியருமாவார். இது அவரது இரண்டாவது நாவல்.

*நூலின் பெயர்:* ஒரு காதலின் கதை (நாவல்)
*நூலாசிரியர் பெயர்:* அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை

**நூல் அறிமுகம்**

இலங்கை வரலாற்றில் 1952-58 காலப்பகுதியையே நாவல் சித்திரிக்கின்றது. கதை பருத்தித்துறையில் இருந்து கதிர்காமம் வரை இலங்கையில் பல இடங்களில் நடக்கிறது.

ஏழு தமிழர்களும் ஆறு சிங்களவருமாக பதின்மூன்று பிரதான கதைமாந்தர்கள் வருகின்றனர். சிறுசிறு பாத்திரங்களும் பல வந்து போகின்றன. எல்லோருமே நடுத்தரவர்க்க மாந்தர். அதிமேதாவிகளோ, அசகாயசூரர்களோ வரவில்லை. எல்லோரும் எங்களைப் போன்ற பலமும் பலவீனமும் உள்ள சாதாரண மனிதர்களாகவே படைக்கப்பட்டுள்ளனர். கதையில் நம்பகத்தன்மையற்ற பாத்திரங்களும் இல்லை; நம்பமுடியாத சம்பவங்களும் இல்லை. பல உண்மைச் சம்பவங்கள் வருகின்றன. பல உண்மையான மனிதர்களும (அந்தக்கால அரசியல் தலைவர்கள்) வருகிறார்கள்.

இலங்கை வரலாற்றில் 1952 - 58 காலப்பகுதி ஒரு முக்கிய காலகட்டம். அது இலங்கை வரலாற்றில் ஒரு திருப்புமையம் என்றே சொல்லலாம். இன்று நடக்கின்ற இந்த உள்நாட்டுப் போருக்கான வித்து, அன்று தான் இடப்பட்டது. அந்தக் காலப் பகுதியின் முக்கியத்துவத்தைத் தமிழ மக்களுக்கு எடுத்துக் கூறுவதற்காகவே இந்த நாவலை எழுதியதாக ஆசிரியர் முன்னுரையில் கூறுகிறார்.

'சிங்களம் மட்டும்' சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டமை, அன்று தமிழ் அரசுக் கட்சியினர் காலி முகத்திடலில் சத்தியாக்கிரகம் செய்து அடிவாங்கியமை, இலங்கையில் இனத்துவேஷம் வளர்ந்தமை, பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தம் எழுதப்பட்டு பின்பு அது கிழித்து எறியப்பட்டமை, 1958ஆம் ஆண்டு இனக கலவரம், இலங்கையில் தமிழ் மக்களுக்காக அமைக்கப்பட்ட முதலாவது அகதிமுகாம் - எல்லாவற்றையும் நேரில் நடப்பவைபோல நிகழ்த்திக் காட்டுகிறார் ஆசிரியர்.

**செந்தமிழ்**

ஆற்றொழுக்குப் போன்ற இனிய மொழிநடையில் கதை தங்குதடையின்றி ஓடுகின்றது. இலங்கை இனப் பிரச்சினையுடன் இரண்டறக் கலந்த கதை.

புற உலக நிகழ்ச்சிகளைச் சித்திரித்தல்; நாடகப் பாங்காகவும் உளவியல் ரீதியிலும் கதை சொல்லுதல் போன்ற பல வழிகளைக் கையாண்டு ஆசிரியர் நாவலை நடத்திச் செல்கிறார்.

இலங்கையின் வரலாற்றோடும் இனப்பிரச்சினையோடும் பின்னிப் பிணைந்த நாவல். நன்றாக எழுதப்பட்ட நாவல். தமிழ் மக்கள் எல்லோரும் வாசிக்கவேண்டிய நாவல்! ☆

## பூங்காக்கள் மீண்டும் திறப்பு

தற்பொழுது மூடப்பட்டிருக்கும் வில்பத்து வனவிலங்குப் பூங்கா விரைவில் மீண்டும் திறக்கப்படவிருக்கின்றது. இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன என்று சுற்றாடல், இயற்கை மூலவளங்கள் அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யால பூங்காவுக்கு அருகில் உள்ள குமண பறவைகள் சரணாலயமும் மீண்டும் திறக்கப்படவிருக்கிறது. விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் காரணமாக இவை மூடப்பட்டிருக்கின்றன. (ஐ)

# கிளிநொச்சி, முல்லைத்தீவில் கண்காணிப்புப் பணி இல்லை?

கொழும்பு,பெப்.26

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கண்காணிக்கும் பணிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நடைபெறுமா?

வடக்கு - கிழக்கின் சகல மாவட்டங்களிலும் யுத்தநிறுத்தம் மற்றும் ஏனைய விடயங்கள் வெளிநாட்டு கண்காணிப்புக்குழுவினரால் கண்காணிக்கப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும் விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டிலுள்ள இந்த இரண்டு மாவட்டங்களிலும் கணகாணிப்புப் பணி நடைபெறாது எனத் தற்போது அறிவிக்கப்பட்டிருப்பதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

இந்த இரண்டு மாவட்டங்களிலும கணகாணிப்புப் பணிகள் தேவையற்றவை என விடுதலைப் புலிகள் முன்வைத்த யோசனையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டதாக அரசாங்க பிரமுகர் ஒருவர் கூறியதாக அந்தச்செய்தி தெரிவித்தது. இதேவேளை -

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பான விடயங்களைக் கண்காணிக்கும் குழுக்களில் இடம்பெறும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இன்றும் நாளையும் கொழும்புக்கு வந்துசேருவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

## நல்லூரில் முத்திரையிடல் பணி

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் எதிர்வரும் முதலாம் திகதி முதல் நிறுவை அளவைகள் நிறுக்கும் கருவிகளுக்கு முத்திரையிடப்படவுள்ளது.

யாழ்.செயலக அளவீட்டு அலகுகளும் நியமங்களும் சேவைகளும் திணைக்களத்தினால் இந்தப் பகுதியில் உள்ள சகல வர்த்தக நிலையங்கள், சந்தை வர்த்தகர்கள், ப.நோ.கூ. சங்கங்களின் நிறுவைகள் அளவைகள் நிறுக்கும் கருவிகளுக்கே பரிசோதனையிட்டு முத்திரையிடப்படவுள்ளன.

நல்லூர் பிரதேச சபையில் எதிர்வரும் முதலாம் முதல் 15ஆம் திகதி வரை காலை 9மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரை முத்திரையிடப்படும் என்றும் பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார். (க-180)


# ஈராண்டு நினைவஞ்சலி

மண்ணில்
20
◊
08
◊
1917



விண்ணில்
26
◊
02
◊
2000

**அமரர் அம்பலவாணர் இராசதுரை** *B.A.(LOND.)*

*(முன்னாள் D.R.O. - திருகோணமலை,*
*இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர், பரமேஸ்வராக் கல்லூரி)*

"என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பினும் வாழ்வான்"

*இல. 880,கே.கே.எஸ்.வீதி,*
*நாச்சிமார் கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.*

(1100)

அன்பு மனைவி, மகன்,
மருமகள், பேர்த்தி.



# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு
03
♦
12
♦
1930



உதிர்வு
27
♦
01
♦
2002

திருமதி
# கதிரவேலு இலட்சுமிப்பிள்ளை

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய்த் திகழ்ந்த அருமை அம்மாவின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (26.02.2002) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியம் மற்றும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை, நண்பகல் மதியபோசனம் ஆகியவற்றில் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*மீசாலை கிழக்கு,*
*மீசாலை*

(1082)

கணவர் (கந்தராசா),
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

26-02-2002




செல்வி
# சிவராசா சிவரம்யா

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த
சிவராசா - சரஸ்வதி தம்பதிகளின்
ஏகபுத்திரி

✧ செல்வி சிவரம்யா ✧

தனது முதலாவது பிறந்த தினத்தை தற்காலிக இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு பப்பா, மம்மி மற்றும் உறவினர்கள் அனைவரும் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் திருவருள் துணைகொண்டு சீருஞ்சிறப்பும் பெற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

"ரம்யா அக்கடமி"
V.T.S. லேன்,
உருப்பிராய் தெற்கு, உரும்பிராய்.

(901)

க.சிவராசா
*(அப்பா)*

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகள் தேவை

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, லண்டனில் தொழில் பார்க்கும், செவ்வாய்க் குற்றமற்ற, 32 வயது மணமகனுக்கு நற்குணமுள்ள மணமகள் லண்டனில் தேவை. லண்டனுக்கு அனுப்பி வைக்கக்கூடியவர்களும் விரும்பத்தக்கது. தொடர்பு: வி.இல. 1470, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (1035)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள இந்தியன் வில்லியஸ் மார்க்-12 எலோக்ரோனிக் மொடல் நீர் இறைக்கும் இயந்திரம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செ.பத்மநாதன், இல.9, குளுக்கண்டி ஒழுங்கை, கட்டைப்பிராய். (1106)

## தேவை

சாவல் வான்கோழி ஒன்று தேவை. வைத்திருப்போர் உடன் தொடர்பு கொள்ளவும். ச.கந்தராஜா, அராலி மத்தி, வட்டுக்கோட்டை. (1102)

## கலந்துரையாடல்

வலி.தென்மேற்கு,பெப்.26

யாழ்மவாட்ட உள்ளூராட்சி உதவியாளர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ்மாநகரசபை கட்டடத்தில் இடம்பெறும்.

அனைத்து உள்ளூராட்சி உதவியாளர்களையும் குறித்த நேரத்தில் ஒன்றுகூடுமாறு வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி உதவியாளர் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (க-185)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.26

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் ஆரம்பக்கல்வி ஜிரி.இசற் தொடர் பயிலமர்வுகளில் பங்குபற்றிய ஆசிரியர்களுக்கான சந்திப்பும் கலந்துரையாடலும் நெல்லியடி ம.ம.வித்தியாலயத்தில் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும்.

சம்பந்தப்பட்டவர்களுக்கு கொடுபனவுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## செயன்முறைப் பரீட்சை

யாழ்ப்பாணம்,பெப்.26

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலயத்தின் சைவ சமய அபிவிருத்திக்கழகம் நடத்தும் வருடாந்த செயன்முறைப் பரீட்சையும நீதிநூல் மனனப் போட்டியின் இறுதிச்சுற்றும் நாளை புதன்கிழமை காலை 9 மணிமுதல் யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மத்திய பிரிவு, மேற்பிரிவு மாணவர்களுக்கான கோலம்போடுதல், மாலை, கட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகிய செயன்முறைப் பரீட்சைகளே நடைபெறவுள்ளன. (க-7)

## கண் பரிசோதித்து 300 பேருக்கு கண்ணாடிகள்

வலிகாமம் தெற்கு,பெப்.26

ஜேர்மன் உதவி நிறுவனத்தின் அனுசரணையுடன் மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலை, இணுவில் மக்லியட் ஆஸ்பத்திரி ஆகியவற்றில் கடந்த வாரம் 300க்கு மேற்பட்டவர்களுக்கு இலவசமாக கண் பரிசோதனைகள் நடைபெற்று கண்ணாடிகளும் வழங்கப்பட்டன.

'பிளாஸ்ரிக்' அறுவைச் சிகிச்சை நிபுணர் சகிதம், ஜேர்மன் உதவி நிறுவனத்தின் கொழும்பு தலைவர் ஹறல் பெரோ, செயலாளர் பிரான்சிஸ் வேதநாயகம், பணிப்பாளர் சபை உறுப்பினர் முத்துக்குமாரசாமி ஆகியோரின் கண்காணிப்பில் கண்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

வைத்திய கலாநிதி டேவிட் பிரான்சிஸ், திருமதி பிரான்சிஸ் ஆகியோர் கண்பரிசோதனைகளை மேற்கொண்டனர். செல்வி ரேச்சல் பிரான்சிஸ் கண்ணாடிகளை வழங்கினார்.

இவர்களுக்கு உதவியாக கிறீன் வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி சி.அம்பலவாணர், வைத்தியசாலை செயலாளர் எஸ்.ஆர்.ஜேகபாலன் மற்றும் இணுவில் மக்லியட் வைத்தியசாலை செயலாளர் சி.இராசநாயகம் ஆகியோர் செயற்பட்டனர்.

மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலையில் 155 பேரும், இணுவில் மக்லியட் வைத்தியசாலையில் 160 பேரும் கண் பரிசோதனை செய்து கண்ணாடிகளைப் பெற்றுக் கொண்டனர். (க-152)

---

உ

# நூல் வெளியீட்டு விழா

*நூல்:-* ஈழத்துத்தமிழ் இலக்கியச் செல்நெறி
*நூலாசிரியர்:-* *கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா*
*காலம்:-* நாளை (27.02.2002) புதன்கிழமை காலை 9.30 மணி *(புதிய நேரம்)*
*இடம்:- கைலாசபதி கலையரங்கம், யாழ். பல்கலைக்கழகம்.*

*நிகழ்ச்சி நிரல்*

*தலைமை:-* திரு.ந.குகபரன் *(தலைவர், தமிழ் மன்றம்)*
*வரவேற்புரை:-* திரு. ந.சத்தியவேந்தன்
*வாழ்த்துரைகள்:-* பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை *(துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)*
பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்
*வெளியீட்டுரை:-* பேராசிரியர் அ. சண்முகதாஸ் *(பீடாதிபதி - உயர்பட்டப்படிப்புகள் பீடம்)*
*முதற்பிரதி பெறுநர்:-* திருமதி இ.பாலசுந்தரம்பிள்ளை
*ஆய்வுரைகள்:-* கவிஞர் சோ.பத்மநாதன்
அதிவண. பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன்
*பதிலுரை:-* நூலாசிரியர்
*நன்றியுரை:-* திரு.பா.சிறீபவன் *(செயலர், தமிழ் மன்றம்)*

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*- யாழ். பல்கலைக்கழகம்.* (1111) - தமிழ் மன்றம்.

---

# இரண்டாவது வருட நினைவஞ்சலி

மலர்வு 15 - 01 - 1981



உதிர்வு 18 - 02 - 2000

## செல்வன் செல்வரட்ணம் சுகந்தன்

அன்பும் பண்பும் கொண்டு ஆதரவுடன் வாழ்ந்த சுகந்தனே!
இன்று எம்மை விட்டுப்பிரிந்து இரண்டு ஆண்டுகள் போயினவோ?
உமது நினைவுகள் எம் நெஞ்சில் நீங்காது நிலைத்துவிட்டன.

- குடும்பத்தினர்.

*ஊரெழு மேற்கு, சுன்னாகம்.* (1116)

---

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 05 - 12 - 1965



ஆண்டவன் அடியில் 26 - 02 - 1994

## செல்வன் நாகமுத்து சக்குணபாலா (அங்கு)

(ஜேர்மனி)

*திதி: 26-02-2002*

எட்டு ஆண்டுகள் கழிந்ததய்யா
என்றும் உன் இனிய முகம் காணத்
தவியாய்த் தவிக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*உம் நினைவால் ஏங்கித் துயருறும்:*
ஐயா, அம்மா, சகோதரர்கள்,
ஆசை அக்கா, மைத்துனர், மைத்துனிமார்,
தம்பி பாலன் (லண்டன்),
மாமன்மார், மாமிமார்.

*M.N.மகேந்திரன்*
(அண்ணன்)
*மாரியம்மன் லேன்,*
*திருநெல்வேலி.*

(1110)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 22 - 03 - 1929



உதிர்வு 08 - 03 - 2001

## திருமதி மகேஸ்வரி இராசரத்தினம்

நேற்றிருந்தாய் நல்விளக்காய்
நிலைத்திருந்தாய் எம்முடனே
வீற்றிருந்தாய் என்பதெல்லாம்
வெறுங்கனவாய்ப் போனதம்மா!

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*பிரிவால் துயருறும்:*
குடும்பத்தினர்.

*நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (1075)

---

உ

மீசாலை கிழக்கு அருள்மிகு
காட்டுவளவு நெல்லியடி கந்தசுவாமி கோயில்

## பிராயச்சித்த சம்புரோட்சன மஹா கும்பாபிஷேகம்

மேற்படி விழா நேற்று (25.02.2002) திங்கட்கிழமை மாலை கர்மாரம்பத்துடன் ஆரம்பமாகியது. இன்று (26.02.2002) செவ்வாய்க்கிழமை மாலை யாகபூசைகள் நடைபெற்று நாளை (27.02.2002) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு சம்புரோட்சன மஹா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கைகூடியுள்ளதால் அத்தருணம் அடியார்கள் அனைவரும் விழாவில் கலந்து முருகப் பெருமானின் அருளைப்பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*மீசாலை.* (1104) - பரிபாலன சபையினர்.

---



உ

# சைவசமயப் பெருவிழா

*இடம்:* அகாயக்குளம் விநாயகர் ஆலயம்
*அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.*
*காலம்:* 27.02.2002 புதன்கிழமை காலை 8.00 மணி
*தலைமை:* சிவத்திரு.சு.செந்தில்நாதன்
*(போஷகரும், யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி அதிபரும்)*

### காலை நிகழ்வுகள்

காலை 8.00 மணிக்கு கோ பூஜை
8.30 மணிக்கு அகத்தியர் தேவார முற்றோதல்
(அகில இலங்கைத் திருமுறை மன்றம்)

### மாலை நிகழ்வுகள்

பிற்பகல் 2.00 மணிக்கு
மங்கள விளக்கேற்றல்:
திருமுறை ஓதல்:
ஞானக்களஞ்சிய அங்குரார்ப்பணம்: பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர்
வரவேற்புரை: சிவத்திரு. ப.சிவலோகநாதன்
அருளாசியுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் *(நல்லை ஆதீன முதல்வர்)*
பிரம்மஸ்ரீ தி.சர்வேஸ்வர சர்மா *(ஆலய குரு)*
வாழ்த்துரை: பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர்
சிறப்புரை: சிவத்திரு. ஆறு.திருமுருகன்
விடயம்: "அறநெறிப் பாடசாலைகளின் முக்கியத்துவம்"
கௌரவ உரைகள்:
திருமதி கோ.அம்பலவாணர்
பண்டிதை சி.தையல்நாயகி
சிவத்திரு. ஜே.கதிர்காமநாதன் *(கிராம சேவை அலுவலர்)*
செல்வி ரஜனி கந்தசாமி *(கலாசார அலுவலர்)*
திரு.சி.சபாநாதன் *(சங்கரத்தை)*
அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்கள் வழங்கலும் கௌரவ உரையும்: சிவத்திரு. சி.சச்சிதானந்தம்
*(உரிமையாளர், சச்சியா இரும்பகம், வட்டுக்கோட்டை)*
துதிப்பாடல்கள்: செல்வி இ.பிரியதர்சினி *(அறநெறிப் பாடசாலை மாணவி)*
நன்றியுரை: சிவத்திரு. க.நவரத்தினராசா *(தலைவர், மேற்படி ஆலய திருப்பணிச் சபை)*

*அனைத்து அடியார்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

- விழாக்குழுவினரும்,
பெருவிழா பூரண உபயம்:
வட்டுக்கோட்டை
சச்சியா இரும்பகத்தினரும்.

*அராலி தெற்கு,*
*வட்டுக்கோட்டை.* (சி-20864)

---

# கண்ணீர் அஞ்சலியும் நன்றியும்

எமது ஆருயிர் அன்பு நண்பனான இ.ராஜ்குமாரின் அன்புத் தந்தையார் **நமசிவாயம் இராஜசிங்கம்** அவர்களின் மறைவையிட்டு திருகோணமலையில் நேற்று நடந்த 31ஆம் நாள் நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கு, நண்பரின் குடும்பம் சார்பாக நன்றி தெரிவித்து, எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் சமர்ப்பிக்கின்றோம்.

சண்டிலிப்பாய் நண்பர்கள் சார்பாக,
அ.சதீஸ்குமார், சி.பிரகாஸ்

(1115)

---

# மரண அறிவித்தல்

## திருமதி புவனேஸ்வரி விசயசுந்தரம்

மானிப்பாய், யாழ்.வீதி, 'தங்கவில்லா'வைச் சேர்ந்த திருமதி புவனேஸ்வரி விசயசுந்தரம் அவர்கள் 23.02.2002 சனிக்கிழமை இரவு கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசயசுந்தரம் (S.P.H.I.) அவர்களின் அன்பு மனைவியும் ஜெயக்குமார் (International Cement Trader), இராஜ்குமார் (Road Development Authority), ரஞ்சன்குமார் (Ray Me Dermott - Dubai), ஜீவன்குமார் (Lanka Cement), ஜயந்தி, ரவீந்திரக்குமார் (Asbestos Cement Industries) ஆகியோரின் அன்புத் தாயரும் வசந்தி, புவனேஸ்வரி (ராணி), கனகசோதி, சரஸ்வதி, இராஜசூரியர் (ரோயல் கல்லூரி), வனிதா ஆகியோரின் அன்பு மாமியாரும் கிருஷ்ணி, கிருஷ்ணரூபன், தர்ஷினி, தர்ஷன், விஜேய், விராஜ், ராகீஷ், மாதுஷா, கணேஸ், சர்மிளா, கிருஷாந், ரேணுகா, சுரேன், கிருஷ்ணா, கர்ஷனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் 24, STUBBS PLACE, OFF DICKMANS ROAD, BAMBALAPITIYA 25.02.2002 அன்று அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று (26.02.2002) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிமுதல் பொறளை, ஜயரத்ன மலர்ச்சாலையில் அஞ்சலிகள் நடைபெற்று பிற்பகல் 4.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'தங்கவில்லா',*
*மானிப்பாய்.*
*தொலைபேசி: 584905 (கொழும்பு)*

தகவல்:
வி.ஜீவன்குமார்
(மகன்)

(1099)

# இலக்கிய வடிவங்களை விமர்சனம் செய்பவர்கள் முதல் தர சுவைஞர்களாக இருக்க வேண்டும்

## 'தாயகம்' சஞ்சிகை வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம்,பெப்.26

இலக்கிய வடிவங்களை விமர்சனம் செய்பவர்கள் அவற்றின் முதல் தர சுவைஞர்களாக இருக்கவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறை விரிவுரையாளர் ஈ.குமரன்.

யாழ்.ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள எழுத்தாளர் ஒன்றியத்தில் அண்மையில் நடைபெற்ற 'தாயகம்' சஞ்சிகை வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். கவிஞர் இ.முருகையன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

சிறுகதை, கவிதை ஆகிய இரண்டு இலக்கிய வடிவங்களும் மனித உணர்வுகளோடு மிகவும் நெருங்கிய தொடர்புடையவை. சிறுகதை என்பது வெறுமனே கதைகூறும் முயற்சி அல்ல. கதைகூறல் என்பது சிறுகதையின் ஓரம்சம்.

இன்று புதிதாக சிறுகதை எழுதுகின்ற இளம் எழுத்தாளர்கள் கதைகூறலுக்கே முக்கியத்துவம் கொடுக்க முனைகிறார்கள். அது தவறானது. கதைக்கு அவர்கள் முக்கிய இடம் கொடுக்கும்போது சிறுகதையின் முக்கிய நோக்கமே இல்லாமறபோய் விடுகின்றது.

சிறுகதை என்பது குறிப்பிட்ட ஒரு சம்பவத்தின் அடியாகத் தோன்றும் உணர்வின் விவரிப்பாகும். இங்கு மனித உணர்வுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும்.

அந்த உணர்வின் விவரிப்பு கதைகூறும் அம்சத்தினால் பாதிக்கப்படும்போது படைப்பாளி தன் உணர்வை பொதுமைப்படுத்த முடியாமற்போகிறது. ஆக அனுபவத் தொற்றல் என்பதுக்கே சாத்தியமில்லாமற்போகிறது. இதனால் படைப்பாளி தனது நோக்கத்தில் வெற்றி பெறாமற் போய்விடுகின்றான்.

இந்தத் தோல்வியானது படைப்பாளியின் படைப்புத் திறனுடன் தொடர்புபட்டது. 'தாயகம்' சஞ்சிகையில் எழுதியிருக்கின்ற இந்த ஐந்து எழுத்தாளர்களும் தங்கள் உள்ளத்திற்குள் முட்டிமோதுகின்ற அல்லது அந்தரப்படுகின்ற ஏதோ ஓர் உணர்வை சிறுகதைகளாக்க முனைந்திருக்கின்றனர்.

போர், போரின் அவலம், விரக்தி, சிறை மீது போன வாழ்க்கை இவற்றுக்கு அப்பால் இவர்கள் சிந்திக்க முற்பட்டமை இவர்களிடம் காணப்படும் பாராட்டத்தக்க அம்சமாகும்.

இதில் இடம்பெற்றிருக்கும் ஐந்து சிறுகதைகளும் ஐந்து புதிய வழிகளில் செல்கின்றன. நவீன இலக்கியங்களுக்கே உரிய தனித்துவம் இக்கதைகளினூடே புலப்பட்டு நிற்கின்றது.

ஐவரும் புதிய புதிய உத்திகளில் கதைகளை நகர்த்துகின்றனர். மொத்தத்தில் இக்கதைகளுக்குள் ஒரு பொதுமை அம்சத்தைக் காண்பது அபூர்வம் எனலாம்.

மூத்த எழுத்தாளர்கள் யார்? ஒரு தொகுதியை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தொகுதியை வெளியிட்டால் ஒருவரை மூத்த எழுத்தாளராகக் கொள்ளலாமா?

எழுத்தின் மூப்பு என்பது ஆய்வறிவு, பரந்த சிந்தனை, கடந்த நோக்கு, வெளிப்படுத்தும் லாவகம் என்பவற்றின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகின்றது.

ஒரு விமர்சகன் தரமான சுவைஞனாக இருக்கவேண்டும். தரமான சுவைஞனே படைப்பின் தரத்தை, படைப்பாளியின் நாடி ஓட்டத்தை துல்லியமாகக் கண்டுபிடிக்க வல்லவன்.

படைப்பாளி ஒருவன் தனது படைப்பினூடாக என்ன சொல்லவருகின்றான் என்பதை இணங்கண்டு கொள்ளுதல் அவசியமானதாகும்.

அனுபவம்மிக்க படைப்பாளிகள் தமது படைப்புத்திறன் காரணமாக சொல்லவருவதை செவ்வையாக வெளிப்படுத்துவர். அவர்களது படைப்புக்களை இலகுவாக படித்துப் புரிந்துகொள்ளமுடியும். ஆனால் சில படைப்பாளிகளின் வெளிப்பாட்டுத் தன்மையில் உள்ள சிக்கலால் அவர்களது படைப்புக்களை எல்லோராலும் இலகுவில் விளங்கிக் கொள்ளமுடிவதில்லை.

இதனை ஒரு தரமான வாசகன் அல்லது சுவைஞன் படித்துப் புரிந்துகொண்டு படைப்பாளி 'இதைத்தான்' இப்படைப்பினூடாகக் கூறமுனைகிறான் என்பதை உணர்ந்துகொள்வான்.

பின்னர் அவன் இந்தப் படைப்பு ஏன் விளங்காமல் இருக்கின்றது. இந்த மாற்றங்களைச் செய்தால் அதிலுள்ள குறைகளை நீக்கலாம் என அபிப்பிராயம் கூறுகின்றான். இந்நிலையில் அவன் சுவைஞன் என்ற நிலைக்கு அப்பால் விமர்சகனாகிவிடுவான்.

விமர்சனம் என்பது பிழை கண்டுபிடிக்கும் செயற்பாடல்ல. அது படைப்பாளியின் படைப்பாற்றலை நெறிப்படுத்தும் செயற்பாடு. அது படைப்பாளியை மேலும் வளர்ப் பதாக இருக்கவேண்டும் - என்றார். மற்றும் பலரும் உரையாற்றினர். (க-4)

# புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் இன்னும் 90 நாள்களில் தமிழீழம்!

## இப்படிக் கூறுகின்றார் ரில்வின்சில்வா

கொழும்பு, பெப்.26


புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் இன்னும் 90 நாள்களில் தமிழீழம் ஏற்பட்டுவிடும் என்று கருத்துத் தெரிவித்துள்ளார் ஜே.வி.பி. பொதுச் செயலர் ரில்வின் சில்வா.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் தமிழீழம் அதிகாரபூர்வமற்ற முறையில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. புலிகள் இயக்கத்தின் ஆயுத பலம் சட்ட ரீதியானதாக்கப்பட்டுள்ளது. அவர்களது பிரதேசத்தினை ஆள்வதற்கு அதிகாரம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையில் பிரபாகரன் கைச்சாத்திட்ட பின்னரே பிரதமர் கைச்சாத்திட்டுள்ளார். இதனால் இலங்கையின் அரச தலைவனாக பிரபாகரன் இன்று விளக்குகின்றார். நோர்வே சமாதானத் தூதுக் குழு வாகவே இங்கு வந்தது. ஆனால் பிரபாகரனுக்கு ஏற்றால்போல உடன்படிக்கையைத் தயாரித்துள்ளது. இதனால் புலிகளின் தேவைக்கேற்றால்போல் எமது படையினரின் பற்கள் பிடுங்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

இராணுவத்தினர் சிறிய சிறிய முகாம்களில் இருந்து வெளியேறி பிரதான முகாமுக்குச் செல்லவேண்டும். இதுவும் நடைபெறுமானால் அனைத்து இராணுவத்தினரும் பலாலி தளத்துக்கு அனுப்பப்படுவர். இதனால் பலாலி முகாமையும் புலிகள் நிர்மூலமாக்கித் தமது நோக்கத்தினை நிறைவேற்றிக்கொள்வார்கள் என்றும் ரில்வின்சில்வா குறிப்பிட்டுள்ளார். (க-ரி)



சண்டிலிப்பாய் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் ஏற்பாட்டில் மார்கழித் திருவாதிரை அன்று மாணிக்கவாசக சுவாமிகளின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தி ஒன்று வீதியுலா கொண்டுவரப்பட்டது. ஊர்தியுடன் பஜனைக் குழுவினர் இணைந்து எடுத்துக்கொண்ட படம் இது.

(க-7-17)

## மெய்வன்மை போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.26

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் வி.மாணிக்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல், திருமதி ர.குமாரவடிவேல் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும், யாழ். கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் ரி.ராஜலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் , கலந்துகொள்வர். (க-ரி)

★ ★ ★

அரியாலை,பெப்.26

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயமும் கொழும்புத்துறை துரையப்பா மகா வித்தியாலயமும் இணைந்து நடத்தும் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்புத்துறை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும்.

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய அதிபர் திருமதி வ. சிவபாலன் தலைமையில் நடைபெறும் விளையாட்டு விழாவில் யாழ்.கல்வி வலய முகாமைத்துவ பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன் பிரதம விருந்தினராகவும், ஓய்வு பெற்ற அதிபர் கா.கணேசதாசன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிப்பார்கள். (க-17)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.26

யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அதிபர் திருமதி எஸ். ஜெயராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினர்களாக யாழ்பல்கலைக்கழக உடற்கல்விப் பிரிவு இணைப்பாளர் கே.கணேசநாதன், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி ஜீ.கணேசநாதன் தம்பதிகள் கலந்துகொள்ளவுள்ளனர் (க-10)

## கடன் அடிப்படையில் கடற்றொழில் உபகரணங்கள்!

யாழ்ப்பாணம்,பெப்.26

பாஷையூர் சென்.அன்ரனீஸ் கடற்றொழிலாளர் சங்கத்தினால் 3 ஆயிரம் ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்கள் சுழற்சிமுறைக் கடன் அடிப்படையில் 50 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் இத்திட்டத்தின் பிரகாரம் மாதாமாதம் கிடைக்கும் கடன பணத்தில் மேலும் ஐவர் சேர்க்கப்படவுள்ளதாகவும் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (க-ரி)

# அனைவர் மீதும் இரக்கம் காட்டுவோம்

**தவக்காலச்சிந்தனை**

**பதினான்காம் நாள்**

தவக்காலத்தில் இரண்டாம் வாரத்தில் காலடி எடுத்துவைத்துள்ளோம். இக்காலத்தில் நம்மை முழுமனதோடு பிறர் அன்புக் கொள்கைகளில் ஈடுபடுத்த முற்படுவோம்! சிறப்பாக இரக்க செயல்களின் அடிப்படையில் எமது செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிப்போம்.

இதனை லூக்கா நற்செய்தியூடாக (அதாவது லூக்கா 6:36-38) எமக்கு விளக்கி நிற்கிறது. "உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல் நீங்களும் இரக்கமுள்ளவராய் இருங்கள்." இந்த இரக்கச் செயலைப் பற்றி திருவிவிலியத்தில் பல இடங்களில் கூறப்படுகிறது. அத்தோடு பெரியவர்களும் இச் செயலைத்தான் அடிக்கடி கூறுவார்கள்.

ஏழைகள், அநாதைகள், கைவிடப்பட்டவர்கள், சமூகத்தால் வறியவர் என்று ஒதுக்கப்பட்டவர்கள் மீது நாம் கட்டாயம் இரக்கம் காட்டவேண்டும்.

இரக்கம் அனைவர் மீதும் காட்ட வேண்டும் என்று கட்டாயப்படுத்துவது ஏனென்றால் இப்பொழுது 'வெளிநாடு' என்று சொல் கேள்விப்பட்டிருப்பீர்கள். வெளிநாட்டுக்காசு வந்தால் வறியவரைப் பார்ப்பதற்கு கண் மறைந்துவிடும்.

இரக்கம் என்பது ஒருவர் இன்னொருவருக்குக் காட்டுவதுதான். மற்றது எம்மை வெறுப்பவர், தூற்றுபவர், சபிப்பவர் போன்றோருக்குக் காட்டுவது தான் இரக்கம்.

எனவேதான் இந்தத் தவக்காலத்தின் வாயிலாக மனித மாண்புகள் மதிக்கப்பட்டு, சாதி குல இன வேறுபாடு காட்டாமல் எல்லோரும் ஒரு தாயின் குழந்தைகளாய் வாழ்ந்து; தாழ்ந்தவன் உயர்ந்தவன் என்று வேறுபாடு காட்டாமல் அயலவரை நேசித்து வாழவேண்டும்.

இதனையே "இரக்கமுடையோர் பேறு பெற்றோர்; ஏனெனில் இரக்கம் பெறுவர்" எனும் இயேசுவின் வார்த்தைக்கேற்று மற்றவருக்கு இரக்கம் காட்டி இயேசுவின் பிள்ளைகளாக வாழ்வோமாக!

*பருத்தித்துறை.* **வ.றொபினா**

# நாட்டின் 31 கல்விப் பணிப்பாளர்கள் உரிய தகைமை இல்லாதவர்களாம்!

கொழும்பு,பெப்.26

நாட்டிலுள்ள 98 கல்வி வலயங்களில் பணியாற்றும் கல்விப் பணிப்பாளர்களில் 31 பேருக்கு அப்பதவிக்கான உரிய தகைமைகள் இல்லை எனத் தெரியவந்துள்ளது.

- இவ்வாறு கொழும்பு சிங்கள வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பல்வேறு அரசியல் காரணங்களால் நியமனம் பெற்ற இவர்களது தனிநபர் கோவைகளை உடனடியாகப் பரிசீலிக்கும்படி மனித வளம், கலாசார நடவடிக்கைகள் மற்றும் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

தகைமைகள் இல்லாத இந்த 31 கல்விப் பணிப்பாளர்களுக்குப் பதிலாக தகைமைகள் உடையவர்களை நியமிப்பது தொடர்பாக உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அமைச்சர் பணித்துள்ளார். (க)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 'பண்டா' குடும்பச் சொத்து!

## இப்படி அனுரா கூறுகிறார்

கொழும்பு,பெப்.26

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பண்டாரநாயக்கா குடும்பத்தின் சொத்து என அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

"எனது தந்தையாரே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கினார். அந்தக் கட்சிக்காக எனது தந்தையார் தனது உயிரையே அர்ப்பணித்தார். அதன் பின்னர் எனது தாயார் கட்சியின பொறுப்புகளை ஏற்று மூன்று முறை நாட்டின் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் பின்னர் எனது சகோதரி கட்சியின் தலைவியானார். அவருக்குப் பின்னர் நானே கட்சியின் தலைவர். கட்சியின் தலைவராகக் கூடிய உரிமை எனக்கே உண்டு.

"யார் எதிர்த்தாலும் சந்திரிகாவின் பின்னர் கட்சித் தலைமைக்கு நான் கட்டாயம் போட்டியிடுவேன். எனக்குப் பிள்ளைகள் இல்லை. சந்திரிகாவின் பிள்ளைகளுக்கு அரசியல் ஆர்வமில்லை. பெரியக்கா சுனேத்திராவுக்கும் பிள்ளைகள் இல்லை. எனவே எனக்குப் பின்னர் யாரும் கட்சித் தலைமையை ஏற்றுக்கொள்ளலாம்" என கொழும்பு சிங்கள வார இதழுக்கு அளித்த பேட்டியில் அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார். (க)

## திருமுறை மன்ற பௌர்ணமி தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.26

அகில இலங்கைத் திருமுறை மன்றம் பௌர்ணமி தினம்தோறும் நடத்திவரும் அகத்தியர் தோத்திரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் என்பன நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு அராலி அகாயவிநாயகர் ஆலயத்தில், மன்றத்தின் உபதலைவர் த.செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது. (க-7)

# அரசு செலவிடும் ஒவ்வொரு ரூபாவுக்கும் 25 சதம் வட்டி செலுத்துகிறது திறைசேரி!

கொழும்பு,பெப்.26

அரசு செலவிடும் ஒவ்வொரு ரூபாவுக்கும் 25சதம் வட்டியாக திறைசேரியால் செலுத்த நேரிடுகிறது என கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு செலவிடும் ஒவ்வொரு ரூபாவிலும் 17சதம் வடக்கு - கிழக்கு யுத்தத்திற்காகவும் 19சதம் அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியத்திற்காகவும் செலவிடப்படுகிறது.

இருப்பினும் நாட்டின் சமூக மேம்பாட்டுக்காக ஒரு ரூபாவில், 10 சதம் மாத்திரமே செலவிடப்படுகிறது என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க)

# அரசின் அனைத்து பிரேரணைகளையும் பொ.ஐ.மு. எதிர்த்தே வாக்களிக்கும்

## சந்திரிகா தலைமையிலான கூட்டத்தில் முடிவு

கொழும்பு,பெப்.26

ஐக்கிய தேசிய முன்னணி அரசால் எதிர்காலத்தில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் அனைத்துப் பிரேரணைகளையும் எதிர்த்து வாக்களிப்பது என பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்றக் குழு தீர்மானித்துள்ளது.

கடந்த புதன்கிழமை ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற விசேட கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அரசு தாக்கல் செய்யும் அனைத்துப் பிரேரணைகளையும் எதிர்ப்பது என குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பிரியதர்ஷன யாப்பா கொண்டுவந்த பிரேரணை மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவால் ஆமோதிக்கப்பட்டது. (க)

தேரேறி வரும் தேவியே! காளி அம்பிகையே!
போரோய்ந்து நிம்மதி தந்தாய்! தாயே சரணம்!



குறித்த தவணையில் தரம்மிக்க
தங்க நகைகளை அழகிய
நவீன டிசைன்களில் அசல் 22 கரட்டில்
உத்தரவாதத்துடன் செய்து
பெற்றுக்கொள்ள சிறந்த இடம்:

**சிவமகாலட்சுமி நகை அகம்**



**- தங்கப்பவுண் நகை வியாபாரம் -**

இல.176, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ராஜா தியேட்டர் முன்பாக)

(C/20875)


## நன்றி நவில்கின்றோம் நாம்

எமது சிரேஷ்ட புத்திரி திருநிறை செல்வி

**※ ராஜகல்யாணி ※**

அவர்களுக்கு 22.02.2002 வெள்ளிக்கிழமை நடைபெற்ற
மங்களகரமான
**பூப்புப் புனித நன்னீராட்டு விழாவில்**
கலந்துகொண்டு சிறப்பித்தோருக்கும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும்
இருந்து வாழ்த்துக்களை அனுப்பி வைத்தவர்களுக்கும்
மற்றும் எமது செல்வியை ஆசீர்வதித்து, விழா சிறப்புற பல வழிகளிலும்
எமக்கு உதவியவர்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள்
அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதில்
பெருமகிழ்ச்சியடைகின்றோம்

*மிஷன் பாடசாலை வீதி,*
*கோண்டாவில் கிழக்கு.* (C/20873)

**திரு. திருமதி ஆனந்தராசா**
**குடும்பத்தினர்.**

## சமூக அபிவிருத்தி கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,பெப்.26

வலி.தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசமும் 'லீட்ஸ்' நிறுவனமும் இணைந்து சமூக அபிவிருத்திக் கருத்தரங்கு ஒன்றினை நடத்தவுள்ளது.

யூனியன் கல்லூரி மண்டபத்தில் நாளை புதன்கிழமை காலை 9.00 மணியளவில் வலி.தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் இ.அரிகரன் தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெறும்.

சிறப்பு விருந்தினர்களாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி. கிருஷ்ணசாமி 'லீட்ஸ்' நிறுவன யாழ். வதிவிடப் பிரதிநிதி பொன்.குணரத்தினம், வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவர் க.கமலசேகரன், வலி.தெற்கு சனசமூக நிலைய சமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி சி.செல்வநாயகம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இக்கருத்தரங்கில் 'சமூக அபிவிருத்தியில் சனசமூக நிலையங்களின் பங்கு' என்ற தலைப்பில் நெடுந்தீவு சமூக அபிவிருத்தி அலுவலர் செ.தவநாதனும் 'மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்' என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக வணிகத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ. இரட்ணமும், 'எமது கிராமிய சமூகங்களின் உள ஆரோக்கியம்' என்ற தலைப்பில் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரனும் கருத்துரை வழங்குவர். (க-ரி)

## பிரதேச செயலர்கள் சகலருக்கும் அழைப்பு

யாழ்.செயலகத்தில் அமைச்சர்கள் பங்குபற்றும் மாநாடு இன்று காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளதால், சகல பிரதேசசெயலர்களையும் பங்குபற்றுமாறு மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் கேட்டுள்ளார்.(க-3)

## தாச்சிப் போட்டி

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீநாராயணா சனசமூக நிலையம், மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் 50ஆவது ஆண்டு நிறைவு பொன்விழாவை ஒட்டி நடத்தப்படும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மானிப்பாய் ஆனந்தா அணியும் யாழ்.பல்கலைக்கழக அணியும் பங்குபற்றுகின்றன. (க-3)


## NEW SCIENCE HALL

*கன்னாதிட்டி,* *யாழ்ப்பாணம்.*

**2002, 2003 A/L வகுப்புகள் சனிக்கிழமைக்கான நேர அட்டவணைப்படியும், 2004 A/L காலை 10.00 மணி தொடக்கம் 27.02.2002 புதன்கிழமையும் நடைபெறும்.**

**- நிர்வாகி.**

(1131)


# கேள்வி அறிவித்தல்

## பிரதம பொறியியலாளர் அலுவலகம்
## கட்டடங்கள் திணைக்களம்(மாகாணம்) யாழ்ப்பாணம்

1) கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) பிரதம பொறியியலாளர் அலுவலகக் கேள்விச் சபையினரால் 2002ஆம் ஆண்டு - பங்குனி மாதம் 20ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.00 மணி வரை யாழ்ப்பாணம் பிரதம பொறியியலாளர் (மாகாணம்), கட்டடங்கள் திணைக்களத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் எமது அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.

2) நிர்மாணப் பயிற்சிகள் நிறுவனத்தில் இக்ராட் (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு கீழே குறிப்பிடப்படும் தரங்களையுடைய அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டும் கேள்விப் பத்திரங்கள் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.

3) ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம்(மாகாணம்) நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

4) தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) பிரதம பொறியலாளர் அலுவலகத்தில் செலுத்தி, பற்றுச்சீட்டைப் பெற்று, கேள்விப் பத்திரங்களை 2002ஆம் ஆண்டு பாங்குனி மாதம் 14ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.00மணி வரை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) நிறைவேற்றுப் பொறியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | பதிவு செய்யும் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|---|
| கொள்கலன் பரிவர்த்தன மாற்றும், மின் பிறப்பாக்கி அறைகள் நிர்மாணித்தல் ஸ்ரீ லங்கா தொலைத்தொடர்பு நிலையம் கரவெட்டி. | எம் - 9 | ரூபா 10,000/= | ரூபா 500/= |

5) கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு வேலைக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டுமே விநியோகிக்கப்படும்.

6) கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம் கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து வேலை நாள்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதம பொறியியலாளர் அலுவலகம்,**
**கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்),**
**கடற்கரை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**பிரதம பொறியியலாளர்**
**யாழ்ப்பாணம்.**

(C/20876)



சங்கரத்தை கரந்தைக் குள முருகமூர்த்தி ஆலயத்துக்கான புதிய மணிக்கூண்டுக் கோபுர அடிக்கல் நடும் விழா அண்மையில் நடைபெற்றது. பரிபாலன சபையின் செயலாளர் பா. சண்முகம் அடிக்கல்லை நட்டு வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் அடியார்கள் காணப்படுகின்றனர். (க-7)

# முக்கிய அறிவித்தல்

**தென்மராட்சி பிரதேச 2ஆம் கட்ட அபிவிருத்தித் தொண்டர் பயிற்சிநெறி எதிர்வரும் 01.03.2002 வெள்ளிக்கிழமை தொடக்கம் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதால் அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு கொடிகாமம், கண்டி வீதியிலுள்ள செல்லப்பா மாஸ்ரர் (கிருஷ்ணா கல்வி நிலையம்) வீட்டில் அமைக்கப்பட்டுள்ள பயிற்சி நிலையத்திற்கு 2ஆம் கட்ட பயிலுநர்களையும், அபிவிருத்திப் பரிசோதகர்களையும், போதனாசிரியர்களையும் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.**

பிரதேச செயலர்,
*தென்மராட்சி.*

(C/20874)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி
## பிரம்மஸ்ரீ மகேஸ்வரக்குருக்கள்
## பவானிஅம்மா

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் வேலணை வங்களாவடியை வதிவிடமாகவும் கொண்டு தற்போது கொழும்பில் வசித்தவரான திருமதி மகேஸ்வரக்குருக்கள் பவானிஅம்மா நேற்று(25.02.2002) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் இந்தியாவில் காலமானார்.

அன்னார் வேலணை, வங்களாவடி முருகன்கோயில், புங்குடுதீவு நுழைவாயில் பிள்ளையார் கோயில் பிரதம குருக்களான மகேஸ்வரக் குருக்களின் அன்பு மனைவியும் புங்குடுதீவு காலஞ்சென்ற சின்னத்துரைக் குருக்கள் - செல்லம்மா தம்பதிகளின் மூத்த புத்திரியும், நெடுந்தீவு காலஞ்சென்ற இரத்தினக் குருக்கள் தம்பதிகளின் தத்து மருமகளும் அனலைதீவு - புளியந்தீவு நடராஜக்குருக்கள் தம்பதிகளின் அன்பு மருமகளும் இரத்தினபவன்சர்மா, துஷ்யந்தி ஆகியோரின் பாசமிகு தாயாரும் புங்குடுதீவு பிரமஸ்ரீ சிவராமலிங்கக்குருக்கள் அமிர்தாம்பாளின் செல்லமைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவிலேயே நடைபெறுகின்றன.

இவரின் துயர்பகிர்வு நிகழ்வு உயரப்புலம், ஆனைக்கோட்டையிலுள்ள சகோதரர் இல்லத்தில் இன்று(26.02.2002) செவ்வாய்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.* (1121)

தகவல்:
பிரம்மஸ்ரீ க.குகதாசக்குருக்கள்
(மூத்த சகோதரர்)

## இராசையா செல்வரட்ணம் (செல்வம்)

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், யாழ்.கல்லூரி விடுதி, வட்டுக்கோட்டையைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட இராசையா செல்வரட்ணம் அவர்கள் 24.02.2002 ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் குளோறியா நகுலேஸ்வரி (சச்சு) அவர்களின் அன்புக் கணவரும் திருமதி நேசராணி பீடில்(கனடா), தங்கராஜா (கொழும்பு), ஜெயநாதன் (திருமலை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், நேசராசா பீடில், தங்கராணி, பிறிம்றோஸ், சண்முகநாதன், பொன்னுத்துரை, அருளம்பலம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (26.02.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் யாழ்.கல்லூரி விடுதி, வட்டுக்கோட்டையில் நடைபெற்றுப் பூதவுடல் நல்லடக்கத்துக்காக வட்டுக்கோட்டை தென்னிந்தியத் திருச்சபை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிரந்தர முகவரி:
*'தங்ககிரி'*
*மட்டுவில் - தெற்கு,*
*சாவகச்சேரி.*

தகவல்:
மனைவி செல்வரட்ணம்
குளோறியா நகுலேஸ்வரி
(சச்சு)

தற்காலிக முகவரி:
*யாழ்.கல்லூரி விடுதி,*
*வட்டுக்கோட்டை.*

(1122)

## வேலுப்பிள்ளை சரவணமுத்து

(ஆர்மோனிய ஆசிரியர், இணுவில்)

இணுவிலைப் பிறப்பிடமாகவும் வன்னியசிங்கம் வீதி, தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சரவணமுத்து அவர்கள் நேற்று (25.02.2002) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் அருமை மகனும் சந்திராவின் அன்புக்கணவருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வன்னியசிங்கம் வீதி,*
*துரைவீதி லேன்,*
*தாவடி.* (1129)

தகவல்:
ச.சூரி (மகன்)
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## வடக்கு - கிழக்கு பிரதேசங்களில்

# மீள் குடியமர்வு நடவடிக்கைகள் தமிழ்ப் புத்தாண்டுமுதல் ஆரம்பம்

## அமைச்சர் ஜயலத் அறிவிப்பு

கொழும்பு,பெப்.26

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றுவது குறித்த தேசியத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்த மக்கள் தாம் விரும்பும் இடங்களிலேயே மீண்டும் குடியமர்த்தப்படுவார்கள். பலவந்தமாக அவர்கள் வேறு இடங்களில் குடியமர்த்தப்படமாட்டார்கள்.

இடம்பெயர்ந்தோரை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் தமிழ் - சிங்களப் புதுவருடத் தினத்தன்று ஆரம்பமாகும்.

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா நேற்று இவற்றை அறிவித்தார்.

அகதிகள் மீள்குடியேற்ற தேசிய திட்டத்தை தயாரிக்கவும் அது தொடர்பான உதவிகளை வழங்கவும் அகதிகளுக்கான ஐநா. உயர்ஸ்தானிகராலயம் முன்வந்துள்ளது. இது தொடர்பான உடன்படிக்கை ஒன்று நேற்றுக் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.

உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா செய்தியாளர் மாநாட்டை நடத்தினார்.

அப்போது அமைச்சர் கூறியதாவது:-

அகதிகள் மீள்குடியேற்ற தேசிய திட்டத்தை செயற்படுத்த எனது அமைச்சில் கொள்கைத் திட்டமிடல் பிரிவு ஒன்று நிரந்தரமாக அமைக்கப்பட்டிருக்கின்றது. வடக்கு - கிழக்கில் இருந்து வெளியேறியுள்ள அகதிகள் தொகை சுமார் 10 லட்சம் என்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலகம் இதனை மறுக்கின்றது.

கிராம அலுவலர்கள், அரசாங்க அதிபர்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின்படி 2லட்சத்து 42 ஆயிரம் பேர் அகதி முகாம்களில் இருக்கின்றனர். 42ஆயிரம் குடும்பங்கள் அகதிகளுக்கான உலர்உணவுப் பொருள்களைப் பெறுகின்றன.

2லட்சத்து 50ஆயிரம் பேர் நண்பர்கள், உறவினர் வீடுகளில் வசிக்கின்றனர். சுமார் 66ஆயிரம் பேர் தமிழ்நாட்டில் அகதி முகாம்களில் இருக்கின்றனர். தமிழ்நாட்டின் வேறு இடங்களில் 45ஆயிரம் பேர் உள்ளனர்.

இவர்கள் அனைவருக்கும் புனர்வாழ்வு அளிக்கவேண்டியது அமைச்சின் கடமை. எனவே ஒவ்வொரு குடும்பம் பற்றியும் தனித்தனியான விவரக் கோவைகள் தயாரிக்கப்படவுள்ளன. இதற்கென 500 ஊழியர்கள் கடமைக்கு அமர்த்தப்படுவார்கள்.

புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியமர்த்தல் அமைச்சு, குடிசன மதிப்பீட்டுத் திணைக்களம், ஐக்கிய நாடுகள் அகதிகள் ஸ்தானிகர் அலுவலகம் ஆகியன இணைந்து இந்த மதிப்பீடுகளை மேற்கொள்ளும் மதிப்பீடுகள் 30 நாள்களுள் பூர்த்திசெய்யப்படும்.

இவ்வாறு சேகரிக்கப்படும் புள்ளி விவரங்களின் அடிப்படையில் தேசிய கொள்கைத் திட்டம் ஒன்று தயாரித்து செயற்படுத்தப்படும்.

முதற்கட்டமாக 60ஆயிரம் பேர் நிரந்தர வீடுகளில் குடியமர்த்தப்படுவர். ஆனால் நாம் திட்டமிட்டுக் குடியமர்த்துவதற்கு முன் பல ஆயிரம் பேர் தாமாகவே சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளனர். இப்படித் தன்னிச்சையாகக் குடியேறுவதில் பெரும் ஆபத்துக்கள் இருக்கின்றன. வீடுகள், பாடசாலைகள் கோயில்கள் உள்ள பெரும்பாலான பகுதிகளில் மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. இவற்றை அகற்றும் பணிகள் இப்பொழுது துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

ஏ-9 பாதை அதிவிரைவில் கிளிநொச்சி ஊடாக யாழ்ப்பாணம் வரை திறக்கப்படும். இப்பொழுது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் புலிகளின் எல்லைகளுக்கும் இடையில் 400 மீற்றர் தூர இடைவெளி உள்ளது. இனிமேல் இந்த இடைப்பட்ட பிரதேசத்தில் இலவச போக்குவரத்துச் சேவை நடத்தப்படும் - இவ்வாறு அமைச்சர் கூறினார். (ஒ)


ராஜா யாழ்ப்பாணம்
சேது புகழ் விக்ரம், காவேரி, ராஜீவ், மணிவண்ணன் மற்றும் பலர் நடிக்க
காசி
தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு: 10.30, 2, 5 (பு.நே.)
(C/20766)

நாகம்ஸ் சுன்னாகம்
இன்று மட்டும்
விஜயகாந்த் (இருவேடம்), சௌந்தர்யா, வடிவேல், வடிவுக்கரசி
தவசி
காட்சிகள்: 11.00, 3.00 (புதிய நேரம்)
(1128)

நிறைஞ்சனாஸ் சங்கானை
அஜித், ஜோதிகா நடித்த
பூவெல்லாம் உன் வாசம்
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (பு.நே.)
(C/20767)

லஷ்சுமி இணுவில்
முரளி, தேவயானி, வடிவேல் நடித்த
கண்ணுக்கு கண்ணாக
காட்சிகள்: 10.30, 2.30 (பழைய நேரம்)
(1140)

NEW SCIENCE COLLEGE
கன்னாதிட்டி. யாழ்ப்பாணம்.
PHYSICS
திரு.குகன்
2004 A/L
26.02.2002:
செவ்வாய் 4.00 மணி
2003 A/L
26.02.2002:
செவ்வாய் 5.00 மணி
❖ அனைத்து வகுப்புகளும் வழமைபோல் நடைபெறும்.
(1132)

வேணுகா கொமினிகேஷன்
நாச்சிமார் கோயிலடி.
- கணனி பிரிவு திறப்பு விழா -
எமது நிறுவனத்தின் கணனிப் பிரிவு 2002.02.25ஆம் திகதியன்று நண்பகல் 12.30 மணிக்கு சுபவேளையில்,
திருவாளர்கள்: S.சுந்தரேசன் (உதவி ஆணையாளர், சமநல சேவை திணைக்களம் - யாழ்ப்பாணம்)
V.T.சிவலிங்கம் (சட்டத்தரணி)
P.பற்குணம் (கலைஞர்)
தி.சௌந்தரநாயகம் (முன்னாள் உத்தியோகத்தர், ஸ்ரீலங்கா ரெலிகொம்)
ஆகியோர் மங்கள விளக்கேற்ற
திரு. K.தங்கராசா (மாவட்ட தொலைத் தொடர்புப் பரிசோதகர், ஸ்ரீலங்கா ரெலிகொம் - யாழ்ப்பாணம்)
அவர்களால் நாடா வெட்டி குதூகலமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.
உங்கள் வெளிநாட்டு அழைப்புகளை Internet நிமிடத்திற்கு ரூ.30/- வீதம் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் E.mail மற்றும் சகலவிதமான கடிதங்கள், அழைப்பிதழ்கள் கம்பியூட்டர் மூலம் மலிவு கட்டணத்தில் தரமாகச் செய்துதரப்படும்.
வேணுகா கொமினிகேஷன் (நாச்சிமார் கோயிலடி)
964, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
தொ.பே. இல. 021 2541
021 2845
(C/20880)
இ.சிறிதரன்
உரிமையாளர்


### ச.ச. நிலையங்களுக்கான கருத்தரங்கு பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,பெப்.26

யாழ்ப்பாண வலயக் கல்வித் திணைக்களத்தில் சனசமூக நிலையங்களின் ஊடான கட்டாயக் கல்வி தொடர்பான கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என்று வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் அறிவித்துள்ளார். இக்கருத்தரங்கு இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)

### சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை சாவகச்சேரியில்

யாழ்ப்பாணம்,பெப்.26

இடம்பெயர்ந்து அல்வாய் சதா பொன்ஸ் கல்வி நிலையத்தில் இயங்கி வரும் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை எதிர்வரும் 4ஆம் திகதி திங்கள் தொடக்கம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் கட்டடத்தில் ஆரம்பமாக இருக்கின்றது.

இவ்வாறு அறிவித்திருக்கிறார் இப்பாடசாலையின் அதிபர்.

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலைக் கட்டடங்களில் திருத்த வேலை நடைபெறுகின்றது. அவை பூர்த்தியானதும் மீண்டும் சொந்த இடத்தில் ஆரம்பிக்கப்படும் என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

பாடசாலை ஆசிரியர்களையும், மாணவர்களையும் அன்றைய தினம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அமைந்துள்ள புதிய கட்டடத்துக்கு சமூகமளிக்குமாறு அதிபர் கேட்டிருக்கின்றார். (க)

### வெட்டுப்புள்ளியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம்,பெப்.26

2001 - 2002 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதியில் வெட்டுப்புள்ளியால் பாதிக்கப்பட்ட அனைத்துத்துறை மாணவர்கள் உயர்கல்வி அமைச்சர் கபீர்காசீம், இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஆகியோரை இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் திறந்த பல்கலைக்கழக யாழ்.அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட மாணவர்கள் அனைவரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். (ஒ)

## சிறுமி மீது பாலியல் வல்லுறவு முயற்சி:

# சந்தேகநபரான படைச்சிப்பாய் அடையாளம் காட்டப்படவில்லை

யாழ்ப்பாணம்,பெப்.26

மல்லாகம் பகுதியில் இராணுவச் சிப்பாய் ஒருவர் 13 வயதுச் சிறுமி ஒருத்தியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயன்றதாகக் கூறப்படும் சம்பவம், தொடர்பாக சந்தேகநபரை இனங்காண்பதற்கான அடையாள அணிவகுப்பு நேற்று திங்கட்கிழமை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் பதில் நீதிவான் க.அரியநாயகம் முன்னிலையில் நடைபெற்றது.

அணிவகுப்பில் ஒன்பது படையினர் வரிசைப்படுத்தப்பட்டபோதிலும் குறித்த சிப்பாயை தன்னால் இனங்காண முடியவில்லை என சம்பந்தப்பட்ட சிறுமி நீதிவானிடம் தெரிவித்துள்ளார்.

அதனையடுத்து சந்தேகநபரை எதிர்வரும் 5ஆம் திகதிவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

முன்னதாகத் தனக்கு நேர்ந்த சம்பவம் பற்றி சிறுமி நீதிமன்றில் விவரிக்கையில் -

தான் மல்லாகத்திலுள்ள பாடசாலை ஒன்றில் கல்விபயிலும் தனது சகோதரியை கூட்டி வருவதற்காக இராணுவ முகாம் ஒன்றைத் தாண்டிச்செல்ல முற்பட்டபோது அங்கு காவலில் நின்ற சிப்பாய் ஒருவர் தன்னை மிரட்டி அழைத்துச்சென்று தனது உள்ளாடையைக் களைந்ததாகவும் -

பின்னர் பாலியல் சேஷ்டைக்கு உட்படுத்தியதாகவும் -

அவ்வேளை தான் பயத்தால் சத்தமிடவே அயலவர் வந்து தன்னைக் காப்பாற்றியதாகவும் தெரிவித்தார்.

சந்தேகநபரான இராணுவச் சிப்பாய்மீது சிறுவர் மீதான பாலியல் வல்லுறவு முயற்சிக் குற்றச்சாட்டின்கீழ் பொலீஸாரால் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.(உ-9-27-48)


## மரண அறிவித்தல்கள்

### கந்தையா குகதாசன்

கந்தையா குகதாசன் அவர்கள் 23.02.2002 சனிக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.02.2002) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கனத்தை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*537, சிவன்கோயில் வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.* (1133)
தகவல்: நா.சண்முகலிங்கம் (பொன்னுச்சாமி)

### திருமதி குணரட்ணம் சுசீலாதேவி

சுன்னாகத்தைச் சேர்ந்த குணரட்ணம் சுசீலாதேவி 23.02.2002 சனிக்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பொன்னையா குணரட்ணம் (விவசாயத் திணைக்களம், வவுனியா) அவர்களின் அன்பு மனைவியும் சுகந்தன், சபேசினி, சர்மினி, ஜெயந்தினி (யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை) ஆகியோரின் பிரியமுள்ள தாயாரும் சிவஞானம், யோகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - இளையபிள்ளை தம்பதியினரின் அருமைப் புத்திரியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - பூரணம் (கட்டுவன்) தம்பதியினரின் அன்பான மருமகளும் செல்வரடணம் (சிமெந்து கூட்டுத்தாபனம்), நாகரட்ணம் (அதிபர், குளமங்கால் றோ.க.பா.), இராஜரட்ணம் (வத்தளை), சரஸ்வதி, திருமதி சிவக்கொழுந்து குணரட்ணம் ஆகியோரின் அன்பான மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (26.02.2002) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்

*டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.* (1138)
தகவல்: கணவர், பிள்ளைகள்.

### திருமதி சோபனாம்பாள் நாகேந்திரம்

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் பாடசாலை ஒழுங்கை தாவடி தெற்கு, கொக்குவிலை வதிவிடமாகவும்கொண்ட திருமதி சோபனாம்பாள் நாகேந்திரம் அவர்கள் நேற்று (25.02.2002) திங்கட்கிழமை இந்தியாவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேந்திரம் அவர்களின் மனைவியும், காலஞ்சென்ற வரதராணி மற்றும் நாகேஸ்வரி (கண்டி), ஞானாம்பாள் (ஆசிரியர் - சுதுமலை வ.த.க.வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆனந்தஜெயந்திரன், ஸ்ரீகாந்தன் (பா.'.ரேன்), திருக்கேஸ்வரன் (ஆசிரியர் - யா/மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற சோமசுந்தரம் (சுந்தரம் பிறதர்ஸ் மருந்துக்கடை) மற்றும் மோகனசுந்தரம் (கந்தர்மடம்), பார்வதாதேவி (திருகோணமலை), சரஸ்வதிதேவி (ஆஸ்திரேலியா), கிருஷ்ணதாசன் (லண்டன்), சுபத்திராதேவி (இ[illegible]ா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், றஜீவன் (ஆசிரியர் - ஊ[illegible]வற்றுறை சென்மேரிஸ் வித்தியாலயம்), ரஜனி, சஞ்ஜீவன் (யாழ்.பல்கலைக்கழகம்), ஷாலினி (யா/வேம்படி மகளிர் கல்லூரி), அரவிந் (கண்டி), அபிராமி (கண்டி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (25.02.2002) திங்கட்கிழமை இந்தியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாடசாலை ஒழுங்கை, தாவடி தெற்கு, கொக்குவில்.* (1136)
தகவல்: வே.ஆனந்தஜெயந்திரன் (மருமகன்)

### சிதம்பரநாதன் ஏகநாதன்

(சின்னம்பி மாமா)

சீரணி நாகபூசணி அம்பாள் கோயில் உரிமையுடையவரும் பிரபல படத்தயாரிப்பாளராகிய றொபின் தம்புவின் (இறப்பு) நிர்வாக முகாமையாளரும் சீரணி சண்டிலிப்பாயைச் சேர்ந்த சிதம்பரநாதன் ஏகநாதன் (23.02.2002) அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் பாக்கியரத்தினத்தின் அன்புக் கணவராவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.02.2002) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*சீரணி அம்பாள் கோயிலடி, சண்டிலிப்பாய், தெற்கு.* (1137)
தகவல்: ஏ.பாக்கியரத்தினம் (மனைவி), பிள்ளைகள்.

புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பான

# கண்காணிப்புக்குழுவின் தலைவராக முன்னாள் ராணுவ அதிகாரி நியமனம்

ஒஸ்லோ,பெப்.26

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப் படுவதைக் கண்காணிக்கும் வெளிநாட்டவர் குழுவின் தலைவராக நோர்வேயின் முன்னாள் இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் துன் கேரடா பொகே நியமிக்கப்பட்டுள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பொகே தலைமையிலான வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழு எதிர் வரும் சனிக்கிழமை இலங்கைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி குழுவின் தலைவரான பொகே வடக்கு - கிழக்கின் சகல பகுதிகளுக்கும் சென்று பல தரப்பினருடனும் கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேஜர் ஜெனரல் துன்கேராடா பொகே சர்வதேசப் பிரச்சினைகள் தொடர்பான அனுபவமுடையவர். 1990களின் முற்பகுதியில் லெபனானில் நிலைகொண்டிருந்த ஐ.நா. கண்காணிப்புப் படையின் தளபதியாகவும் இவர் பணியாற்றியுள்ளார். (ஒ-4)

## யாழ். பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திறந்த பல்கலைக்கழகம், உயர் தொழில்நுட்ப நிறுவனம், கல்வியியற் கல்லூரி ஆகியவற்றின் பிரதிநிதிகள் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய பயிற்சி கலாசாலைகளின் அதிபர்கள், மாவட்டத்தின் பிரபல பாடசாலைகளின் அதிபர்கள் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளவுள்ளனர்.

காலை 10 மணிக்கு அரச அதிபர் தலைமையில் யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் இளைஞர் விவகாரங்கள், விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ, சூழலியல், இயற்கை வளங்கள் பிரதியமைச்சர் இந்திக பண்டாரநாயக்கா, இந்து கலா சார அமைச்சர் தி.மகேஸ்வரன் மற்றும் மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் அலுவிகார, குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

பிரதேச செயலர்கள், மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி, விளையாட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் பல்வேறு விளையாட்டுத் துறைகளின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

பிற்பகல் ஒரு மணியளவில் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாழ். மாவட்டத்தில் உள்ள 14 பாடசாலைகளுக்குச் சென்று பார்வையிடவுள்ளனர்.

அதன்னத் தொடர்ந்து மாலை 7 மணிக்கு நல்லை ஆதீனத்துக்கும், 7.15 மணிக்கு யாழ். நாகவிகாரைக்கும், 7.45 மணிக்கு யாழ். நகரப பகுதியில் உள்ள பள்ளிவாசலுக்கும் இரவு 8 மணிக்கு ஆயர் இல்லத்துக்கும் அவர்கள் செல்லவுள்ளனர். (உ-ஒ-4-8-10)


எமது புதிய வீடியோ CD வெளியீடு
* காதல் கலாட்டா
பிரதிகள் உடன் பெறலாம்
அப்பு எலக்ரோனிக்ஸ்
யாழ்ப்பாணம்
(C/20879)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
முழு நிலா நாள் கருத்தரங்கு
இடம் : யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம்
காலம் : நாளை (27.02.2002) புதன்கிழமை பிற்பகல் 3.30 மணி (புதிய நேரம்)
தலைமை :- பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை (துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)
கருத்துரை :- "யாழ்ப்பாணத் தமிழர்களின் சைவ உணவுப் பழக்கவழக்கங்கள்"
வழங்குபவர் :- வைத்திய கலாநிதி சே.சிவசண்முகராஜா MD(S) (முதுநிலை விரிவுரையாளர், சித்த மருத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்)
அனைவரும் வருக!
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி. பழைய மாணவர் சங்கம்.
(C/20881)
ஆதரவு:-
சுன்னாகம் லயன்ஸ் கழகம்


## உடன்படிக்கை குறித்து நாடாளுமன்றத்தில் அடுத்தமாதம் விவாதம்

கொழும்பு,பெப்.26

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை குறித்து விவாதிக்க எதிர்வரும் 4 மற்றும் 5 ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தின் விசேட கூட்டம் கூடவுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

உடன்படிக்கை தொடர்பாக விவாதிப்பதற்கு நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ வற்புறுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

## உடன்படிக்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லாக முப்படைகளின் கட்டளை அதிகாரியான ஜனாதிபதிக்கே அதற்கான அதிகாரம் உண்டு. எனவே ஜனாதிபதியால் கைச்சாத்திடப்படாத இந்த ஒப்பந்தம் சட்டபூர்வமான வலு அற்றது என அக்கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

நாடெங்கும் சுவரொட்டிகளை ஒட்டி இது குறித்துப் படையினருகு அறிவுறுத்தவுள்ளதாகவும் -

சட்டவிரோதமான இந்த உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாகக் கவலை கொள்ளாது கடமையாற்றுமாறு படையினரைக் கோரவுள்ளதாகவும் -

சிஹல உறுமய கட்சியின் பிரசாரச் செயலாளர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். (ஒ)

## பொ.ஐ.மு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை பொ.ஐ.முன்னணியின் அங்கத்துவக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர்களுள் ஒருவரும் பொ.ஐ.மு. அரசின் முன்னாள் அமைச்சருமான பட்டி வீரக்கோன் இந்த உடன்படிக்கையை எதிர்க்கவோ, நிராகரிக்கவோ பொ.ஐ. முன்னணிக்குக் தகுந்த காரணம் ஏதுமில்லை என்று தெரிவித்திருக்கின்றார்.

வாசுதேவ நாணயக்கார, டாக்டர் விக்கிரமபாகு கருணாரட்ண ஆகியோரும் அரசு - புலிகள் உடன்படிக்கையை வரவேற்றுள்ளனர்.

இதேசமயம் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எதிராக வழக்கு ஒன்றினைத் தாக்கல் செய்வதற்கு பொ.ஐ. முன்னணியும் அதன் கூட்டுக் கட்சிகளும் முயற்சித்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

இந்த உடன்படிக்கையானது இலங்கையை விடுதலைப் புலிகளுக்கு விலைபேசி விற்கும் ஒரு முயற்சியாகும் எனக் குற்றஞ்சாட்டி இந்த வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## அமைச்சர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொள்வதற்காக ஞாயிறன்று அனுராதபுரம் சென்றிருந்த ஜனாதிபதி நேற்றும் அங்கேயே தங்கியிருந்தார்.

இதனால் அமைச்சர்களின் பதவி ஏற்பு வைபவம் வியாழக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வை ஜனாதிபதி வேண்டுமென்றே தொடர்ந்து ஒத்திப் போட்டு, அரசை எரிச்சலுக்கும் விசனத்துக்கும் உட்படுத்தியிருப்பதாக அவதானிகள் கூறுகின்றனர். (உ)

## மதனராஜன் மீண்டும் யாழ். சிறையில்

கடந்த 19ஆம் திகதி நாடாளுமன்றில் எம்.பியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட ஈ.பி.டி.பி. உறுப்பினர் ந.மதனராஜன் கடந்த சனிக்கிழமை மீண்டும் யாழ். சிறைக்கு அழைத்து வரப்பட்டார். எம்.பியாக சத்தியப்பிரமாணம் செய்துகொள்வதற்கென கொழும்புக்கு சிறைச்சாலை அதிகாரிகளால் அவர் கொண்டுசெல்லப்பட்டிருந்தார். (ஒ-10)

## பொதுமக்கள் ஐக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹங்குராங்கெட்ட பகுதியில் உள்ள மதுரட்டவில் பொதுத்தேர்தலை ஒட்டி நடந்த பிரசாரக் கூட்டத்தில் பங்குபற்ற வந்திருந்த எஸ்.பி.திஸநாயக்காவை அங்கு வைத்துக் கொல்ல சதிசெய்யப்பட்டதாகவும் -

அப்போது கைது செய்யப்பட்டவர்களிடம் இந்தப் பிஸ்டலில் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாகவும் - கூறப்படுகின்றது.

அதையடுத்தே தேசியப்பட்டியல் எம்.பியான அஜந்த டி சொய்ஸா கைது செய்யப்பட்டார்.

பொ.ஐ.முன்னணியைச் சேர்ந்த டி.எம்.தஸநாயக்கா, சரண குணவர்த்தனா, அனுருத்த ரத்வத்தை ஆகியோர் ஏற்கனவே வெவ்வேறு வழக்குகளில் கைது செய்யப்பட்டிருப்பது தெரிந்ததே.

பொ.ஐ.முன்னணியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சரும் தற்போதைய எம்.பியுமான றெஜி ரணதுங்கவும் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

பொ.ஐ.முன்னணியின் சார்புக் கட்சியான ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் மதனராஜனும் படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ளார். (உ)

## முதலில் இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுபற்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது தேர்தல் பிரசாரங்களில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

தாம் சொன்னதை இப்போது அவர் நிறைவேற்றப்போகிறார்.

இடைக்கால நிர்வாகப் பொறுப்பை ஏற்கப் புலிகளும் தயாராகவே இருக்கிறார்கள்.

இடைக்கால நிர்வாகப் பொறுப்பை ஏற்றால் யுத்தத்தால் பெரும் அழிவுக்கு உள்ளாகியிருக்கும் வடக்கு - கிழக்கைத் தம்மால் துரித கதியில் கட்டி எழுப்ப முடியும் என்று புலிகள் நம்புகிறார்கள்.

அகதிகளாகவும் ஆதரவற்றவர்களாகவும் இருந்து அல்லற்படும் மக்களின் துயர் துடைக்கும் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு அவர்களுடைய வாழ்க்கையில் வசந்தம் ஏற்படுத்தலாம் என்று புலிகள் திடமாக நம்புகிறார்கள்.

ஆயுதம் ஏந்திப் போர் புரிவதில் புலிகள் வல்லவர்கள் என்பது அவர்கள் இதுவரை குவித்த வெற்றிகளிலிருந்து உலகிற்குத் தெரிந்துவிட்டது.

ஆயுதப்போராட்டத்தில் மட்டுமன்றி அஹிம்சைப் போராட்டத்திலும் அவர்கள் நிகரற்றவர்கள் என்பதை தியாகி திலீபன் கொள்கைக்காக உண்ணாவிரதம் இருந்து, உயிர் நீத்து நிரூபித்தார்.

இப்போது ஜனநாயகச் செயற்பாடுகளிலும் தாம் எவருக்கும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை இடைக்கால நிர்வாகத்தை நடத்திக் காட்டப்போகிறார்கள் புலிகள் என்று அவர்களுடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

இடைக்கால நிர்வாகத்தை புலிகள் நடத்தும் காலத்திலேயே நோர்வே அரசின் அனுசரணையுடன் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சு அரசுக்கும் புலிகளுக்குமிடையே நடக்கும்.

அதற்கிடையில் அவ்வப்பொழுது நடக்கப்போகும் பேச்சுக்கள், பேச்சுக்கான பேச்சுக்களாகவும் புரிந்துணர்வு உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தப்படுவதில் எழக்கூடிய சிக்கல்களைத் தீர்ப்பதற்கான பேச்சுகளாகவுமே இருக்கும்.

சமாதானம் நீண்டதூரப் பயணம் என்றும், மெதுமெதுவாக அடி எடுத்து வைத்துப் படிப்படியாக இலட்சியத்தை அடைவோம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறிவருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.


எமது புதிய வீடியோ CD வெளியீடு
வெங்கடேஷ், சிம்ரன் நடித்த
காதல் கலாட்டா
பிரதிகள் உடன் பெறலாம்
வீடியோ வீஷ்
யாழ்ப்பாணம்
(C/20878)



புதிய வீடியோ CD வெளியீடு
வெங்கடேஷ், சிம்ரன்
காதல் கலாட்டா
புதிய போஸ்டர்கள்
விற்பனைக்கு உண்டு.
விஷ்ணு வீடியோ
கோண்டாவில்.
(1128)



விற்பனைக்கு
DISH ANTENNA 8', 10'
அளவுகளில் ANALOG
மற்றும் DIGITAL
RECEIVER DISH
ANTENNA SET
ரூ.22000/= இல் இருந்து...
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: அருண் வீடியோ மூவி
நெல்லியடி, கரவெட்டி.
(1124)



விற்பனைக்கு
பல்வேறு MODELகளில்
T.Vக்கள், RADIO வகைகள்
VCR வகைகள், வீடியோ
கசற் வகைகள், KONICA
படச் சுருள்கள்... என்பன
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
அருண் வீடியோ மூவி
நெல்லியடி, கரவெட்டி.
TEL: 021-3217
070-212801
(1123)



நாளை!
A/L - 2002
கலைப்பிரிவு
வகுப்புகள்
அனைத்தும்
சனி, ஞாயிறு
நேர அட்டவணைப்படி
நடைபெறும்.
DMI
(C/20877) யாழ்நகர்.



பொங்கிவரும் புதுவெள்ளம்
உடற்கல்வித்துறை மாணவ மன்ற வளர்ச்சி நிதிக்காக முதன்முறையாக யாழ்.பல்கலைக்கழக அனைத்து பீட மாணவர்களுடன் யாழ்.முன்னணி இசைக் கலைஞர்கள் இணைந்து வழங்கும் மிகப் பிரமாண்டமான
இன்னிசை கானங்கள்
முற்றிலும் நவீன கணனி மயப்படுத்தப்பட்ட வாத்தியக் கருவிகளுடன் வர்ண மின்விளக்குகளாலும் வடிவமைக்கப்பட்ட மாபெரும் இசை நிகழ்ச்சி
இடம் :- மானிப்பாய் மகளிர் கல்லூரி
காலம்:- நாளை (27.02.2002) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணி
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
பிரவேசச் சீட்டை நுழைவாயிலில் பெற்றுக்கொள்ளலாம்.
உடற்கல்வித்துறை மாணவர் மன்றம்
(1139)
விளம்பர அன்பளிப்பு:
* சாரங்கன் நகை மாடம்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சிங்கப்பூர் நகைகளை நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்)
* சுஜா போட்டோ அன் வீடியோ
இல. 36, பாரதி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
உரிமையாளர் ஆ.சிவராஜா.



முழு நிலாக் கருத்தரங்கு
கருப்பொருள்: "குடும்ப வாழ்வின் உறவுகள் பிள்ளைகளின் திருமண உறவில் ஏற்படுத்தும் விளைவுகள்"
கருத்துரை வழங்குபவர் :
அருட்திரு. இ.ஸ்ரலின் M.Sc.(Coun.Psy)
காலம் : நாளை (27.02.2002) புதன்கிழமை
நேரம் : பிற்பகல் 3.30 மணி (இ.நே)
இடம் : "அகவொளி"
குடும்ப வளத்துணை நிலையம்,
181, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.
இயக்குநர்.
(1105)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில்26.02.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.